Quality Japanese Car Parts
Japarts
Discount Prices
08450 66 44 22
www.japarts.co.uk

FREE இலவசம்
The UDHAYAN
உதயன்
Estd.: 1996
UK's No.1 National Tamil Newspaper

Diamond Palace
Mithus Jewellery
Tooting 020 87675333 76 High Street SW17
Croydon 02086831756 322 London Road

e-mail: thelondon@udhayan.freeserve.co.uk
UN 55 Mar 2007 / April 2007
For News: 020 8279 0354

# உள்துறை அமைச்சின் புதிய கெடுபிடிகள்!

அண்மையில் சட்ட அனுமதி அற்று இங்கிலாந்தில் ஒளித்துத் திரியும் வெளிநாட்டவர்களை நாட்டைவிட்டு வெளியேறும்படி Please make arrangements to leave UK என்று taxt message அனுப்ப இருப்பதாக உள்துறை அமைச்சு அறிவித்து உள்ளது. இது வெளிநாட்டவர்களை குறிவைத்து உள்துறை அமைச்சு தொடங்கியிருக்கும் புதிய நடவடிக்கைகளின் ஒருபகுதி. "அவர்களுக்கு எப்படி ரெலிபோன் நம்பர் தெரியும்? ரெக்ஸ்ற் மெசேஜ் வந்த உடனே வெளிக்கிட்டு விடுவோம் என்று நினைத்து விட்டார்களா?" என விசனப்படுகிறார் வோல்தம்ஸ்ரோவைச் சேர்ந்த உதயா.

மேற்கண்ட நடவடிக்கையின் இன்னுமொரு பகுதியாக விசா இல்லாதவர்களை குடிவைத்திருக்கும் வீட்டுக்காரர்களுக்கு 20,000 பவுண்கள் அபராதம் விதிக்க முடிவெடுத்துள்ளது உள்துறை அமைச்சு. "இனி வீட்டுச் சொந்தக்காரர்கள் எல்லாம் விசா கேட்கத் தொடங்கப் போகிறார்கள். இதன் மூலம் மதம், நாடு நகரம் அறிந்து வாடகைக்கு வீட்டை கொடுக்கும் துவேசமும் அதிகரிக்கப்போகிறது" என உதயா மேலும் விசனப்பட்டார்.

மார்ச் முற்பகுதியில் இடம்பெற்ற பிபிசியின் காலை நிகழ்ச்சியிலும் பிபிசி ரேடியோ 5 லைவ்விலும் உள்துறை அமைச்சர் ஜான் ரீட் கொடுத்த பேட்டியில் துவேசத்தை காட்டியிருந்தார். இதன் நேரடி மொழிபெயர்ப்பை இங்கு சுருக்கித் தருகிறேன். 'சட்டம் மீறி இங்கு வரும் வெளிநாட்டவர் எல்லாம் எங்கள் சேவைப்பணத்தில் சுகமாக வாழுவதும் NHS போன்ற இலவச வைத்திய சேவைகளைப் பெற்றுக் கொள்வதும் வேலை செய்வதன் மூலமாக எமது நாட்டின் அடிப்படைச் சம்பளத்தை மட்டந்தட்டுவதும் ஏற்றுக் கொள்ள முடியாதது. ஒவ்வொரு வருடமும் இவர்களுக்கு நாம் நெருக்கடிகளை அதிகரித்துக் கொண்டே போவோம். முன்பை விட இப்போது நாம் அனுமதி மறுக்கப்பட்ட அகதிகளை அதிகம் திருப்பி அனுப்புகின்றோம். இப்போது ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய நடைமுறைகளின் மூலம் அவர்களுக்கு இன்னும் நெருக்கடிகளை ஏற்படுத்துவோம்.'

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க யாரும் முன்வரவில்லை. மாறாக விரைவாக அனுமதி மறுக்கப்பட்டவர்களை திருப்பி அனுப்பும் திட்டத்தை செய்யும்படி மென்மையாக கண்டித்துள்ளனர். இங்கு சில சம்பவங்களை நினைவுபடுத்த வேண்டியுள்ளது. பில்லியன் கணக்கில் இலாபமீட்டும் கறுப்புச் சந்தையால் சுரண்டி எடுக்கப்படும் இந்தத் தொழிலாளர்கள் இங்கிலாந்து பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையானவர்கள் என்று டேவிட் பிளங்கேற், ஜக் ஸ்ரோ என்று பல மந்திரிகள் முன்பு அறிக்கை விட்டிருந்தது நமக்குத் தெரியும். Immigrant Watch என்ற அதிதீவிர வலதுசாரி அறிவுஜீவிகளின் கணிப்புப்படி பார்த்தால் கூட இங்கு களவாகத் தங்கியிருக்கும் தொழிலாளர்களால் பில்லியன் கணக்கில் இலாபம் கிடைக்கிறது.

(விரிவான கட்டுரை 4ம் பக்கத்தில்)


**J. Balan**

TRADE CASH & CARRY
MAKBROS
RICE, ETHNIC, BEERS, WINES, SOFT DRINKS, CRISPS, CHOCOLATES
SPECIALS
akash basmati 20kg £11.69
fanta, sprite, lilt, dr.pepper 6x2ltr pm £4.39
Oasis 24x500ml £8.99
WALK IN ONLY
WE ARE HERE FOR YOUR CONVENIENCE
TEL: 0208 204 0533
FAX: 0208 204 0633
UNIT 8, DALSTON GARDENS, STANMORE,MIDDX,HA7 1BU.
Nisa Today's

RIGHT PRICE
TRADE CASH & CARRY
((((( Many Opening Offers )))))
UNIT 8 WHITBY AVENUE PARK ROYAL INDUSTRIAL ESTATE LONDON NW10 7SF
CHOCOLATES, DRINKS, BEER, RIZLA, STATIONERY, TOILETERIES, TOYS
TEL:020 3188 3005 FAX:020 3188 3006

Starline
15 Years established
• புதிய இணைப்பைப் பெறுவதற்கோ
• கைத்தொலைபேசி உதிரிப்பாகங்களுக்கோ
• நவீனமயமாக்கவோ
• அல்லது எந்த விதமான பழுதுகளையும் திருத்தி சரிசெய்யவும்
• சகல பிரச்சனைகளையும் தமிழில் பேசி சரிசெய்து கொள்ள
T. 0208 606 8888
235 The Broadway Southall UB1 1ND

IDEAL GLAZING
WITH OVER 25 YEARS EXPERIENCE
Manufacturers & Installers of uPVC and Aluminium




FOR FREE ESTIMATE CALL
020 8574 8342
Fax: 020 8843 1903
IDEAL GLAZING (EURO) LTD
29 The Green, Southall
Middlesex, UB2 4AN

R&J HEATING & PLUMBING TRADE LTD
BRISTAN HERITAGE ARMITAGE AQUALISA
Complete Bath Suite £199* Only
(Includes WC, Basin&Pedestal, Steel Bath, Mixer Taps, Bath Waste)
Many Other Special Offers In-store
Call us on 0208 538 7722
Address:
Unit 3, Derby Road Ind Estate
Derby Road, Hounslow
Middx, TW3 3UH
Tel: 0208 538 7722 / Fax: 0208 538 7733
* Price Includes VAT

DPR D.P.R. WHOLESALERS
BRANCHES AT SOUTH WOODFORD & EDMONTON
South Woodford: 020 8498 0755 Edmonton: 020 8807 8971
FOR ALL YOUR TOYS, HARDWARE, HOUSEHOLD, GARDENING
DPR FOR QUALITY & STOCK
OLD LD TOYS CUSTOMERS WELCOME
TOYS... TOYS.. TOYS..
www.dprwholesalers.com info@dprwholesalers.com

www.curtainsworld.com
CURTAINS DIRECT
Curtains | Blinds | Net Curtains | Linens | Quilts | Towels



Europa House, Hanger Lane London W5 1DP Tel:020 8998 8122
247 Cricklewood Broadway NW2 6NX Tel: 020 8208 4244

To Advertise: 07957681944

V.J.CARPETS
110 The Green, Southall Middlesex, UB2 4BQ
Tel: 020 8574 9033
SPECIALOFFERS
FREE UNDERLAY WORTH £3.57 SQ.MTR
WITH CARPETS OVER 5.96 S.Q. MTR
WE ARE NOW OFFERING FREE FITTING, FREE MEASURING FREE ESTIMATING & FREE LOCAL DELIVERY

ASPRA
BRIDAL & BEAUTY ACADEMY
OUR PROMISE
Only at ASPRA's dreams become reality!
We promise total customer satisfaction and strive for excellence in all our endeavour.
You will be the MOST BEAUTIFUL for your occasion.
Ms. CD. PUJA
(Dermatologist & Image Consultant)
Our Consultants :
Ms Radha 0787 1580 780 Ms Janani 0786 6704 496



MOBILE GOSSIP
179 Ealing Road, Wembley HA0 4LW
0208 9000 151
WE OFFER MONTHLY CASHBACK



FREE Nokia 2310
£3.50/Month
for 10 months
500 MINS
ANYTIME ANY NETWORK
250 TEXTS
12 MONTHS CONTRACT
Terms and conditions apply as in store

உண்மை ! நடுநிலை ! மக்கள் நலன் !

பிரித்தானியத் தமிழர்களின் செய்திப் பத்திரிகை

**உதயன்**

உண்மை ! நடுநிலமை ! மக்கள் நலன் !

1997 முதல் அதிக பிரதிகளுடன் பரந்த விநியோகத்தைக் கொண்டு வெளிவரும் தமிழ் மக்களின் ஒரே சமூகப் பத்திரிகை.

தொடர்புகளுக்கு :
UDHAYAN
P O Box 35806
London, E11 3JX, UK
Tel : 020 8279 0354


ஆசிரியர் குழு:
தலைமை நிருபர்:
த ஜெயபாலன்
செய்தி ஆய்வு:
ரி கொன்ஸ்ரன்ரைன்
விளம்பரப் பொறுப்பாளர்:
த புஸ்பலிங்கம்

நிருபர்கள்:
கே அரவிந்தன் (இலண்டன்)
பொன் சிவகுமார் (இலண்டன்)
கா சாந்தி (இலண்டன்)
கே பாலன் (ஐரோப்பா)
வி அருள் (கனடா)
இ சுரேஸ் (கனடா)

உதயன் பத்திரிகை GNM(PVT) LTD இனால் மாதாந்தம் வெளியிடப்பட்டு வருகிறது. இதில் வெளிவரும் கருத்துக்கள் எப்பொழுதும் உதயன் பத்திரிகையினதோ அல்லது வெளியீட்டாளர்களினதோ கருத்துக்களாக இருக்கும் என்பதில்லை. இப்பத்திரிகையில் உள்ள செய்திகள் உண்மையான தகவல்மூலங்களில் இருந்து பெறப்பட்ட சரியான தகவல்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பிரசுரிக்கப்பட்டு உள்ளது. இருப்பினும் இதில் வரும் தவறுகளுக்கு வெளியீட்டாளர்கள் பொறுப்பல்ல.

# மூன்று குழந்தை பெறும் தமிழ் குடும்பத்திற்கு 5000 கனடிய டொலர்

புலம்பெயர்ந்த தமிழர் சமூகத்தில் குழந்தைகள் பிறப்புவீதம் வெகுவாகக் குறைந்துள்ள இந்நிலையில் அதனை அதிகரிக்கும் நோக்குடன் அகிலன் அசோஷி யேற்ஸ் நிறுவனத்தின் ஆதரவுடன் 5000 கனேடிய டாலர் நிதியுதவி வழங்கும் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.



தமிழ்க் குழந்தைகள் ஊக்கவிப்புத் திட்டத்தின் முதற்கட்டம் 2010 டிசம்பர் 31இல் முடிவடையும். 2005 ஜனவரி 1ம் திகதிக்குப் பின்னர் திருமணமாகும் தம்பதியினர் அடுத்து வரும் ஆறு ஆண்டுகளுக்குள் (31.12.2010 வரை) ஒற்றைப் பிரசவங்களாக எப்போது மூன்று குழந்தைகளைப் பெறுகின்றனரோ அப்போது தமக்கான 5000 கனேடியன் டாலர்களை விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ள உரித்து உடையவர்களாகின்றனர்.

இத்திட்டம் ஒரு பொழுதுபோக்குப் போட்டியன்றென்றும் சமூக அக்கறையுள்ள பலர் கூடி எடுத்த முடிவின் வெளிப்பாடு என்றும் கனடாவில் இருந்து வெளிவரும் தமிழர் தகவல், தனது பெப்ரவரி 2007 இதழில் தெரிவித்துள்ளது.

INSIGHT SYSTEMS

பிரஜாவுரிமை பெறுவதற்குரிய **LIFE IN THE UK** பாட வகுப்புக்கள் மிகக் குறைந்த கட்டணத்தில் நடத்தப்படுகின்றன. கிழக்கு லண்டன் பகுதியில் இதுவரை கற்பித்த மாணவர்களில் 98%ற்கு மேலானவர்களை தேர்ச்சியடைய வைத்துள்ள பெருமைக்குரிய அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் இலகு முறையில் கற்கை நெறி, குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை, தமிழில் உதவிக் குறிப்புக்கள், ஒவ்வொரு வகுப்பு முடிவினிலும், அத்தியாய முடிவினிலும், பயிற்சிப்பரீட்சைகள். வெகு விரைவில் கம்பியூட்டர் வகுப்புக்களும், ஆங்கில வகுப்புக்களும் ஆரம்பமாகவுள்ளன.

தொடர்புகளுக்கு: **07940 406 007**

KERALA AYURVEDA
In its purest form now at Southall and Wembley



*Are you suffering from any ofthe following Chronic/ Acute Disease?*

| | |
|---|---|
| ARTHRITIS | PSORIASIS |
| SPONDYLITIS | MIGRAINE |
| FROZEN SHOULDER | STRESS&STRAIN |
| SLIP DISC | PILES |
| RHEUMATISM | OBESITY |
| MUSCLE PAINS | SINUSITIS |
| JOINT PAINS | ECZEMA |
| DEPRESSION | INSOMNIA |

*Kerala's age-old Ayurvedic Panchakarma treatments are veryeffective fortreating such diseases. We have established an Ayurvedic Centre in Kerala's traditionalway at the following address to undertake these treatments forthe suffering people at London and are manned by well-qualified & experienced Ayurvedic Doctors and Ayurvedic Panchkarma technicians from Kerala, India.*

NACS Kerala Ayurveda

Also we provide Ayurvedic Health Rejuvenation treatments through traditional medicated oil massages, steam bath etcc and beauty therapies using herbal mixtures.

CALL FOR APPOINTMENT AND FREE CONSULTATION
8 Grand Parade, Forty Ave, Wembley
Tel: 020 8908 4666
07866 687 216

CALL FOR APPOINTMENT AND FREE CONSULTATION
60 King St, Southall, MiddlesexUB2 4DB
Tel: 020 8571 9111
07958 539658

Website: KeralaAyurveda.co.uk/santhigramAyurveda.com Email: nacsayurveda@lycos.co.uy

CSS DIY
SUPPLIERS OF DIY & BUILDING PRODUCTS
Plumbing, electrical
Timber, Palni,
Tool hire,
Hardware,
etc...
Special offer for readers: Key cutting 3 for the price of 2 from £1,25 each
Call now:
020 8471 1586
133 Wakefield Street, East Ham, London E16 1LG

PARTY SHOP FOR SALE
INCLUDING 2 FLATS ABOVE IN HARROW, PLEASE CONTACT AT
07830 307 086

FOR ALL YOUR PARTY NEEDS
CARDS
HELIUM BALLOONS
HELIUM HIRE
HALL DECORATION
BANNERS & BUNTING
FIREWORKS
TOYS
GIFTS ETC...
341 Northold Road, South Harrow
Middlesex HA2 8EE
Tel:020 8423 6383 Mob: 07956 123 790
IDEAL GIFTS & PARTY
www.idealgifts-party.co.uk

ARE YOU LOOKING FOR A NHS DENTIST?
DENTAL SURGERY
434 Pinner Road, North Harrow (Opp. Allied Carpets) 0208 863 1576
371 Kenton Road, Kenton (Opp. Kenton Fruit&veg Store) 0208 907 5886
Opening hours: Mon-Fri 9-5.30 pm
Children, elderly and benefitpatients all wellcome
Tamil speaking dentist available
Please ask Dr Tushianlhy Sivarajah

www.ratnamarble.co.uk
RMGL
RATNA MARBLES AND GRANITE LTD
Importers of Marble, Granite, Lime stone, Sand stone,Kitchen worktops, Vanity tops & Bathrooms
RATNA MARBLE & GRANITES LTD
Office 2, 15 Main Drive, East Lane Business Park, Wembley - HA9 7NA
Tel - Fax : 0208 904 3441
Mob : 07900 457 139

SHIELD INSURANCEBROKERS (LONDON) LTD.
- Shops
- Commercial & Residental Property Owners
- Places of worship (Churches, Temples & Gurdwaras etc)
- Care Homes
- Private, Education, Schools, Collegies & Nursuries

Call for special rate: 020 8574 7796
165 WesternRoad, Southall, Middlesex UB2 5HP
www.shieldinsuranceservices.co.uk
info@shieldinsuranceservices.co.uk

SUN TV
+44(0) 208 33 56780
WWW.SUNTVUK.COM

Balbir Sudera
Jewellery Appraiser Services
Niraj's Jewellers Ltd.
Claims/Appraiser/Assessor Advisor/jeweller
136 Uxbridge Road, Hays, Middlesex, London UB2 OJH
Tel: 020 8573 9223 Fax: 020 8573 0875
Mobile: 07985 416 633

TCS TUTORIAL COLLEGE
GSCE · A-LEVEL · NVQ
Saturday school · English · ESOL · EFL
Language Classes · Foundation Degrees
Short courses · Retakes
Monday - Saturday
9,00am-7,00pm
GUARANTEED RESULTS
Fitzgerald House Willowcourt Avenue
Kenton Harrow Middx. HA3 8ES
A Department for Educationand Skills (DfES) registered school
Tel: 0208 909 1432

HEATRAK
HEATING & PLUMBING SOLUTIONS LTD.
Suppliers & Installer of Boilers, Bathrooms, Radiators, Heatingcontrols & Plumbing accessories
* Gas, Heating &Plumbing Engineer
* Unvented Hot water cylinders
* Landlords Certificates * Free Estimates
Call your local engineer on
Tel: 020 8911 6550 Mob: 07961 446 077
335 Ley Street, Ilford, Essex IG1 4AA
Email: heatrak@talk21.com

# உள்துறை அமைச்சர் ஜான் ரீட் விடும் புலுடா

- உதயா -

இவர்களின் அறிக்கைக்கு மறுப்புத் தெரிவித்த உள்துறை அமைச்சர், இவர்கள் காட்டும் கணக்கை விட இத்தொழிலாளர்களால் கிடைக்கும் இலாபம் பல மடங்கு அதிகம் என்று அண்மையில் அறிவித்திருந்ததும் எல்லோருக்கும் தெரிந்ததே. இப்படியிருக்க இலாப நோக்கம் கொண்டு இயங்கும் உள்துறை அமைச்சு திடீரென கொள்கை மாற்றம் கொண்டு இந்தத் தொழிலாளர்களை வெளியேற்ற முடிவெடுத்துவிட்டது என்று யாரும் நினைக்க வேண்டாம். ஒரு காலமும் அவர்கள் அதை செய்யப் போவதில்லை. அவர்கள் முயற்சித்தாலும் அது முடியாத காரியம். உள்துறை அமைச்சின் கணக்குப்படி பார்த்தாலே அரைமில்லியனுக்கும் மேலான அனுமதியற்ற தொழிலாளர்கள் இங்கு வசித்து வருகிறார்கள். கடந்த சில ஆண்டுகளுக்குள் 2 மில்லியனுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் அடிமட்ட வேலைக்காக அனுமதியுடன் இங்கிலாந்து வந்துள்ளார்கள். இவர்கள் செய்யும் வேலைகளை உள்துறை அமைச்சு பின்வருமாறு வகைப்படுத்தியுள்ளது.

தொழிற்சாலை வேலை செய்பவர்கள் - 37%

Ware houseல் வேலை செய்பவர்கள் - 10%

cleaning வேலை செய்பவர்கள் - 9%

catering வேலை செய்பவர்கள் - 9%

packing வேலை செய்பவர்கள் - 9%


தோட்ட வேலை செய்பவர்கள் - 6%

உணவகங்களில் வேலை செய்பவர்கள் - 6%

Hotel களில் வேலை செய்பவர்கள் - 6%

வீட்டு வேலை செய்பவர்கள் - 5%

மேற்குறிப்பிட்டவாறு சுருக்கிக் கொண்டு போகும் வேலைகளுக்கு அடிப்படைச் சம்பளத்தை மீறிய சம்பளம் வழங்கப்படுவதில்லை. தற்போதைய இங்கிலாந்து அடிப்படைச் சம்பளம் பின்வருமாறு இருக்கிறது.



To Advertise: 07957681944

Champers Wines CASH & CARRY
Suppliers of Wines, Beers and Spirits
Wide range of product available at very Competitive Prices
For further details contact
Sales on Tel: 020 8961 2889
Fax: 020 8963 0989
Unit 11, Cumberland Avenue, Park Royal, London NW10 7RT
We Accept All Major Credit Cards

World Wide Courier Shipping
"Free Packaging Boxes Provided when using our services"
Call 020 8381 0023
Or 07811 275522

ASPRA BRIDAL & BEAUTY ACADEMY LTD
SELF GROOMING BEAUTY SEMINAR & WORKSHOP
*Beauty plays a very vital role in the way we present ourselves to others. The cosmetic colors that we select will help to enchance our own natural beauty and provides us with confidence*
PROGRAMME HIGHLIGHTS.... 1 WEEK COURSE (20 HOURS)
- Make-Up (Day make-up)
- Hair Styles
- Eyebrow Shaping&Drawing
- Dressing Tips & Colors
- Modern Costumes
- Saree Drapping (Normal)
- Home Skin Care (Herbal)
- Slimming Tips & Exercise
- Counseling & Motivational Class

MISS RADHA 07871 580 780 MISS JANANI 07866 794 496

skylord travel
Skylord Travel Special Offers


| | | |
|---|---|---|
| Bangalore from £325 | Bombay from £265 | Chennai from £325 |
| Calcutta from £365 | Colombo from £380 | Delhi from £265 |
| Hyderabad from £370 | Trivandrum from £325 | Above Fares are nett exclude taxes & Fuel Surcharges |

Eastcote : 020 8582 1111 London : 020 7388 8111 Southall : 020 8537 1111




Hyundai London.
Your capital's No.1 Hyundai dealership
020 8457 6660
Edgware Road, NW9 7BN, North of Staples Corner
passion
fiveyear warranty
HYUNDAI

-உதயா - Continues from page 3



22 வயதுக்கு மேற்பட்டவர்கள் - £5.35/hr
18-21 வயதுக்கு உட்பட்டவர்கள் - £4.45/hr
18 வயதுக்கு உட்பட்டவர்கள் - £3.30/hr

உள்துறை அமைச்சால் விசா வழங்கப்பட்ட மில்லியன் கணக்கான பெரும்பாண்மை தொழிலாளர்கள் (50% இற்கும் அதிகமானவர்கள்) 22 வயதுக்குட்பட்டவர்களாக இருப்பதும் உள்துறை அமைச்சின் தரவுகளில் காணலாம். அனுமதி பெற்றவர்களின் சம்பளமே £4.45 என்றால் அனுமதி பெறாமல் இருப்பவர்களின் நிலை என்ன? இதைத்தான் இவர்கள் எம் அடிப்படைச் சம்பளத்தினை மட்டந்தட்டுகிறார்கள் என்று சொல்கிறார் ஜோன் ரீட். அண்மையில் வங்கிகளின் முகாமையாளர்கள் 40 மில்லியனுக்கும் அதிகமாக போனஸ் (கவனிக்க இது ஒரு வருடத்துக்கான போனஸ்) எடுத்ததும் எமக்குத் தெரியும். அடிப்படைச் சம்பளத்தை மட்டந்தட்டுபவர்கள் அவர்கள் தான்.

NHS ஐயும் பேச்சுவாக்கில் இவர்கள் இழுப்பது இன்னுமொரு அடாவடித்தனம். நாடளவில் NHS தொழிலாளர்கள் தொழிற்கட்சிக்கு எதிரான மிகப் பெரிய போராட்டத்தை நடத்தி வருகிறார்கள். அரசாங்கம் இது சம்பந்தமாக பெரிய பிரச்சனைகளை சந்தித்து வருகிறது. இந்த பிரச்சனைகளை இலகுவாக புதைக்க வெளிநாட்டு தொழிலாளர்களை குற்றம் சாட்டுகிறார்கள். இவர்களின் நடவடிக்கைகள் ஏற்கனவே ஒடுக்கப்படும் கீழ் மட்டத் தொழிலாளர்கள் மேலான சுரண்டலை மேலும் உச்சப்படுத்தும். இந்த தொழிலாளர்களை இதே கீழான நிலையில் வைத்திருக்க மிகத் தெளிவுடன் இவர்கள் உருவாக்கும் உத்திகள் இவை.

ஈராக், ஆப்கானிஸ்தான் என்று இங்கிலாந்து இராணுவம் கைது செய்த முஸ்லீம் மக்களை கைது செய்யப்பட்ட அதிர்ச்சியில் தொடர்ந்தும் வைத்திருக்க Interrogation நடக்கும் வரை Anxiety, Stress ஐ உச்சத்தில் வைத்திருப்பதற்காக அடி, உதை மற்றும் தலையில் முகமூடி, சுவற்றின் முன் நிலத்திற்கு சமாந்தரமாக கைகளை நீட்டி நிற்க வைத்தல் போன்ற பல்வேறு நுணுக்கமான முறைகளை திட்டமிட்ட முறையில் கடைப்பிடிக்கின்றன. இதன் மூலம் கைதிகளை அவர்களின் பதற்ற நிலையில் இருந்து தளரவிடாமல் வைத்திருக்க இவர்களால் முடிகிறது. கிட்டத்தட்ட இதே உத்தியைத் தான் உள்துறை அமைச்சும் அமைதியற்று தங்கியிருக்கும் தொழிலாளர்கள் விடயத்தில் உபயோகித்து வருகிறது. மில்லியன் கணக்கில் வேலையாட்களை தருவித்துக் கொண்டு இங்கு ஏற்கனவே தங்கியிருக்கும் தொழிலாளர்களை திருப்பி அனுப்பப் போவதாக கூறுவது, அவர்களுக்கு நெருக்கடிகளை வழங்குவது எல்லாம் இதன் அடிப்படையில் தான்.

அகதி அந்தஸ்து மறுக்கப்பட்ட, பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் மிகவும் கீழ்த்தரமான முறையில் நடத்தப்படுகிறார்கள். பலர் காலில் Electronic tag (நவீன விலங்குகள்) உடன் திரிகிறார்கள். இவர்கள் தம் தம் நாடுகளில் கஸ்ரங்களை அனுபவித்தவர்களே தவிர வேறு எந்த சட்டவிரோத நடவடிக்கைகளிலும் ஈடுபடாதவர்கள். கிழமைக்கு ஒரு தரம் அல்லது ஒவ்வொரு நாளும் கையெழுத்து வைக்க இவர்கள் காவல் துறையகத்துக்கு வருவிக்கப்படுகிறார்கள். இவர்கள் வேலை செய்ய அனுமதி இல்லை. போக்குவரத்துக்கோ, உணவுக்கோ, தங்குமிடத்துக்கோ அரசாங்கம் எந்த உதவியும் செய்வதில்லை. அப்படியிருக்க இவர்கள் எப்படி காசு கொடுத்து ஒவ்வொரு நாளும் கையெழுத்து வைக்க காவல்துறையிடம் போகமுடியும்? ஜோன் ரீட் சொல்வது போல விசா இல்லாதவர்கள் இந்த நாட்டில் ஒன்றும் செய்யமுடியாது. அவர்கள் அரசாங்கத்திடம் இருந்து ஒரு சதமும் பெற முடியாது. வாழ்வின் விளிம்புக்குத் தள்ளப்பட்ட நிலையில் இவர்கள் எப்படிப்பட்ட வேலையையும் செய்ய தயாராக இருக்கிறார்கள்.

சப்பாத்துத் தொழிற்சாலைகளில் மணிக்கு £1.50 இலிருந்து £2.50க்கு வேலை செய்கிறார்கள். பத்து பவுண்களுக்கும் குறைவாக சப்பாத்து கிடைக்கும் மர்மம் அதுதான். டோவரில் சாமான்களை packing செய்யும் தொழிலாளர்களும் இவர்கள் தான். இவர்களால் வாழைப்பழக் கொம்பனி என்றழைக்கப்படும் தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களின் பாடு மிக வேதனையானது. இவர்களை மேற்பார்வையிடும் gang masters கிடைக்கும் சொற்ப சம்பளத்தின் ஒரு பகுதியை போக்குவரத்துக்கு அதுக்கு இதுக்கு என்று வாங்கிவிடுகிறார்கள். மிகுதிக் கொஞ்சப் பணத்தில் தான் இவர்கள் தங்கள் செலவை பார்க்க வேண்டும். இவ்வாறு நடத்தப்பட்ட சீனா தொழிலாளர்கள் கடற்கரையில் சிப்பி பொறுக்கச் சென்ற போது உயிர் நீத்த கதையையும் நாட்டின் பல பாகங்களில் இவர்கள் முழு அடிமைகளாக விற்கப்பட்டு வேலை வாங்கப்படுவதையும் செய்திகளில் படித்திருப்பீர்கள்.

இப்படியான நிலையில் இவர்கள் ஏன் தொடர்ந்தும் இந்த நாட்டில் இருக்க வேண்டும்? இவர்களை ஏன் உள்துறை அமைச்சு திருப்பி அனுப்பாமல் வைத்துள்ளது? என்ற 2 கேள்விகளுக்கும் ஒரே பதில் தான் உண்டு. லாபமும் லாப உந்துதலில் உருவாக்கப்படும் வறுமையை பேணுதலும் என்று இதற்கு சுருக்கமாக பதில் சொல்ல முடியும்.

இப்படி அடிமையாக வாழும் மக்களை தொடர்ந்தும் கஸ்ரங்களுக்கு உட்படுத்தி மூலதனப் பெருக்கில் ஈடுபடும் இந்த அரசாங்கம் அணுகுண்டு தயாரிப்பதற்காக பல பில்லியன் பவுண்களை அண்மையில் ஒதுக்கியுள்ளது. மக்களிடம் பணம் பறிக்கும் இவர்கள் ஆட்சியின் கீழ் 3 இல் 2 பங்கு குழந்தைகள் வறுமைக் கோட்டின் கீழ் வாடுகிறார்கள். பெரும்பாண்மை வறிய மக்களுக்கும் சிறுபான்மை முதலாளிகளுக்கும் இடையிலான தூரமும் வெப்பமும் அதிகரித்துக் கொண்டே போகிறது. வறுமைக் கோட்டின் கீழ் தள்ளப்பட்டு வேலையற்றுத் தவிக்கும் இங்கிலாந்து தொழிலாளர்களை சமாதானப்படுத்தி மழுங்கடித்து வைத்திருக்க ஆதிக்க சக்திகள் முயன்று வருகின்றன.

டெய்லி மெயில் போன்ற வலதுசாரி பத்திரிகைகள் எல்லாவற்றுக்கும் இந்த வெளிநாட்டு தொழிலாளர்களை சுட்டிக் காட்டுகிறது. 40 பில்லியனுக்கு மேல் போனஸ் எடுக்கும் கதைகளை இவர்கள் முன்னிலைப்படுத்த மாட்டார்கள். அப்படி காசு உழைப்பது அவர்களின் கெட்டித்தனம் என்று இன்னும் வயித்தெரிச்சலைக் கூட்டுவார்கள். இதை விட வெளிநாட்டுத் தொழிலாளர்களை, வெளிநாட்டுக்காரர்களை குறிப்பாக ஆசிய, ஆபிரிக்கரை சந்தேகக் கண்ணுடன் பார்க்கிறார்கள். இதனால் தான் இன உரசல்களும் அடிபாடுகளும் அண்மையில் அதிகரித்து வந்துள்ளது.

சாப்பாட்டுக்கு வழியற்று எவ்வளவு சம்பளத்துக்கும் வேலை செய்யத் தயாராக இருக்கும் இந்தத் தொழிலாளர்களை சுரண்டுவதால் முதலாளித்துவம் சம்பள உயர்வை மட்டுப்படுத்தி சம்பளத்தையும் வேலை நேரத்தையும் கட்டுப்படுத்தி லாபத்தை மேலும் அதிகரிக்கிறது. இந்த முதலாளிகளை தாக்காமல் ஜோன் ரீட் தொழிலாளர்களை தாக்கி கூறுகிறார். இதனால் பாதிக்கப்படும் மற்றைய சக தொழிலாளர்களுக்கு வெறுப்பு வருவதும் உரசல் ஏற்படுவதும் இயற்கையாக நிகழ்கிறது.

இதற்கு எதிராக போராடுவதற்கு தொழிற்சங்கங்கள் முன்வர வேண்டும். தொழிற்சங்கங்கள் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல எல்லாத் தொழிலாளர்களும் தொழிற்சங்கத்தில் சேர வேண்டும். விசா இல்லாதவர்கள் தொழிற்சங்கத்தில் சேர முடியாது என்ற வதந்தி கூட இருக்கின்றது. இது தவறானது. இதுபற்றி விபரம் அறிய விரும்புபவர்கள் அல்லது இது போன்ற நடவடிக்கைகளை எதிர்க்க விரும்புகிறவர்கள், போராட விரும்புபவர்கள் மேலதிக விபரங்களுக்கு உதயன் பத்திரிகையுடன் தொடர்பு கொள்ளவும்.

# தமிழக சட்டமன்றத்தில் இலங்கைப் பிரச்சினை தொடர்பாக மதிமுக - காங்கிரஸ் மோதல். கைகலப்பு தவிர்ப்பு.

சென்னை, மார்ச் 30: தமிழக சட்டப் பேரவையில் இலங்கை பிரச்சினை குறித்த விவாதத்தில் காங்கிரஸ், மதிமுக உறுப்பினர்களிடையே கைகலப்பு ஏற்படும் சூழல் ஏற்பட்டது. பிற உறுப்பினர்கள் தடுத்ததால், வாய்த் தகராறுடன் மோதல் நின்றது.

பட்ஜெட் மீதான விவாதத்தில் மதிமுக உறுப்பினர் வீர. இளவரசன் பேசினார். தொகுதி பிரச்சினைகளை பற்றிப் பேசிய அவர், பின்னர் இலங்கை பிரச்சினை குறித்துப் பேசினார். அதன் விவரம்: இலங்கையில் தமிழர்கள் தினமும் உயிரிழக்கின்றனர். அங்கிருந்து வரும் அகதிகளை பாதுகாக்கும் உணர்வு தமிழகத்தில் உள்ள அனைவருக்கும் உண்டு. இலங்கைத் தமிழருக்காகக் குரல் கொடுக்கும் அதே நேரத்தில் தமிழகத்தில் வன்முறைக்கு இடம் தரக்கூடாது என்பதுதான் மதிமுகவின் நிலை என்றார்.

அப்போது காங்கிரஸ் உறுப்பினர்கள் ராஜசேகரன், போரூர் வரதன் ஆகிய இருவரும் எழுந்து நின்று கருத்துத் தெரிவிக்க முற்பட்டனர். உடன் ராஜசேகரனுக்கு பேரவைத் தலைவர் அனுமதி அளித்தார்.

ராஜசேகரன் (காங்): இலங்கைப் பிரச்சினை யில் விடுதலைப் புலிகளை ஆதரித்ததன் விளைவாக ராஜீவ் காந்தியை இழந்து நிற்கிறோம். அங்கு ஏற்பட்டுள்ள சூழ்நிலையால் தமிழகத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இலங்கைத் தமிழர்களை ஆதரிப்பதில் எவ்வித கருத்து வேறுபாடும் கிடையாது. ஆனால் தீவிரவாதத்துக்கு இங்கு இடம் தரக்கூடாது. தீவிரவாதத்தை ஆதரித்து பேசுவதற்கு பேரவையில் அனுமதி தரக்கூடாது.


போரூர் வரதன் (காங்): சென்னையில் வன்முறையைத் தூண்டுபவர்களுடன் தொடர்பு வைத்திருந்தார் என்பதற்காக மதிமுக பிரமுகர் சீமா பஷீர் சமீபத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். விடுதலைப் புலிகளை வைத்துக் கொண்டு வைகோ மிரட்டுகிறார். உடனே மதிமுக உறுப்பினர்கள், காங்கிரஸ் உறுப்பினர்களிடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இந்நிலையில் பேரவை காங்கிரஸ் கட்சித் தலைவர் சுதர்சனம் குறுக்கிட்டுப் பேசியது: இலங்கைத் தமிழர்களைப் பாதுகாப்பதில் மாற்றுக் கருத்து கிடையாது. ஆனால் இங்கு தீவிரவாதத்தை ஆதரிக்கக் கூடாது என்றுதான் வலியுறுத்துகிறோம். மதிமுக உறுப்பினர் கடந்த காலத்தை சிந்தித்துப் பார்க்க வேண்டும். கடந்த ஆட்சியில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயல்பட்டார் என்பதற்காகத்தான் அக்கட்சியின் பொதுச் செயலாளர் மீது "பொடா" வழக்கு போடப்பட்டது என்றார்.

வீர இளவரசன்: வன்முறையில் எங்கள் இயக்கத்துக்கு துளியும் சம்பந்தம் கிடையாது. கடந்த 13 ஆண்டுகளாக நாங்கள் நடத்திய பேரணியிலோ, கூட்டத்திலோ எங்கும் வன்முறை ஏற்பட்டது கிடையாது. இலங்கைத் தமிழர்களை பாதுகாக்க குரல் கொடுப்பதை எப்படி தவறு என்று கூற முடியும்?

இந்நிலையில் வீர.இளவரசனுக்கு பின்னாலிருந்த விருதுநகர் வரதராஜன், காங்கிரஸ் உறுப்பினரான ராஜசேகரனோடு கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். அவருடன் கம்பம் ராமகிருஷ்ணனும் சேர்ந்துகொண்டார். வாக்குவாதம் முற்றி கைகலப்பு ஏற்படும் சூழல் ஏற்பட்டது. வரதராஜன், ராஜசேகரன் ஆகியோர் கைகளை நீட்டி தாக்கிக் கொள்வது போல நெருங்கினர். உடனிருந்த மற்ற காங்கிரஸ் உறுப்பினர்கள் வசந்தகுமார், விஜயகுமார் ஆகியோர் அவர்களைத் தடுத்தனர். சுமார் 2 நிமிஷம் நீடித்த அமளியால் பேரவையில் பரபரப்பு ஏற்பட்டது. பின்னர் இரு தரப்பினரும் அமைதியடைந்தனர்.

நன்றி: தினமணி




மதிமுக சட்ட மன்ற உறுப்பினர் விருதுநகர் ஆர் வரதராஜன்



காங்கிரஸ் சட்ட மன்ற உறுப்பினர் தோட்டியம் எம் ராஜசேகரன்

## படுகொலைகளுக்கு எதிரான நினைவுகூரல்




THE EURO'S BEST PROFILES (DOUBLE GLAZERS)
Manufatrures, Suppliers and Installers of: Double glazed windows, Doors, Patio Doors, Conservettories and Porches in uPVC & Aluminum (HOME IMPROVEMENT)
407 LEY STREET, ILFORD, ESSEX, IG1 4AB
TEL/FAX: 020 8478 8833
MOBILE: 07958 227 814/07950 446 978
www.bestprofiles.com

Secure a brighter future with a Degree
Bachelor and Masters Degree Programmes
Commencing April 2007
at
London School of Management
43-47 New Broadway, Ealing, London, W5 5AH
Call 0208 567 4355 or email:admin@lsm.ac.uk for more details or visit our website
www.lsm.ac.uk

viewing funeral hall
Asian Funeral Care Ltd.
www.asianfuneralcare.com
A personal tailored service to meet every indivudial religious cultural need at reasonable rates
Tel: 0208 909 3030
Mob: 07970 934623

KV Builders & Contractors
Loft Conversion
Rear & Side Extention
Roofing
FREE Estimate
25 Years Experience.
100% Guaranteed Work
Special Offer: 3 bedroom replacement roof, Tilling for £ 1700 only
Call Kulveer:
020 8570 7152
07932 500 777

Motor Masters
Top Quality Servicing & Repair on all Makes of Vehicles
M.O.T While You Wait
Unit 7 The Squirrel Trading Estate, Viveash Close, Nestles Ave, Hayes, Middlesex UB3 4RZ
Tel: 020 8561 9100
Fax: 020 8573 8641

Auto - Right
MOT's CLASS 4&7 (While you wait)
Mechanical and Crash Repairs, Servicing & Insurance work undertaken
(Courtesy car available on insurance work)
Unit 6, Endsleigh Industrial Estate, Endsleigh Road, Southall, Middx. UB2 5QR
Tel: 020 8843 1754

# திரிபடையும் செய்திகளும் திரிக்கும் ஊடகங்களும்

செய்திகள் திரிபடைவதும் சில ஊடகங்கள் அதனைத் திட்டமிட்டுத் திரிபுபடுத்தப்படுவதும் இலங்கைச் செய்திகளை சிறிது காலம் அவதானித்து வருபவர்களுக்கு தெளிவாகப் புலப்படும். லண்டனில் நடைபெறும் சில சாதாரண விடயங்கள் இலங்கை ஊடகங்களில் ஊதிப் பெருப்பிக்கப்பட்டு முக்கிய செய்திகளாக வெளியிடப்படுகிறது. இந்த செய்தி மோசடிகளில் இணையத்தளங்கள் முன்னணி வகிக்கின்றன.

பாரம்பரிய ஊடகங்களும் செய்தியின் உண்மைத் தன்மையை ஆராயாமல் அல்லது அதனைத் தெரிந்திருந்தும் அதுபற்றி அக்கறையில்லாமல் செய்திகளை வெளியிடுகின்றன. நண்பர்கள், உறவினர்கள், எதிரிகள் என செய்திகளும் அதற்கேற்ப வகைப்படுத்தப்பட்டு வெளியிடப்படுகிறது. மக்களுடைய தகவற் சுதந்திரத்தை கணக்கில் கொள்ளாமல் மக்களுக்கு உண்மையான தகவல்களை வழங்க வேண்டும் என்ற எந்த சிரத்தையும் இன்றி செய்திகள் வெளியிடப்படுகிறது.

"லண்டனில் ஆர்ப்பாட்டம் செய்த விடுதலைப் புலி ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டனர்" என்ற செய்தி மார்ச் 20ல் இலங்கையின் தேசியத் தொலைக்காட்சியான ரூபவாகஹினியில்



அங்கையற்கண்ணி

ஒலிபரப்பப்பட்டது. இச்சம்பவம் மிகவும் திரிபுபடுத்தப்பட்ட ஒன்று மட்டுமல்ல ஒரு நாட்டின் தேசியத் தொலைக்காட்சியில் முக்கிய செய்தியாகும் அளவிற்கு ஒன்றும் முக்கியமானதுமல்ல.

வெஸ்ட்மினிஸ்ரர் பாராளுமன்றக் கட்டடத்தில் Campaign for Peace & Unity in Sri Lanka - CPUSL என்ற அமைப்பு கருத்தரங்கு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. அதில் பல பிரித்தானிய பா உ க்களும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி உட்பட இலங்கை அரசியல் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

வெஸ்மினிஸ்டர் பாராளுமன்றத்தின் வாயிலில் தமிழர்களுக்கு ஆதரவான சுலோகத்துடன் ஆர்ப்பாட்டமொன்று அமைதியான முறையில் இடம்பெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அங்கையற்கண்ணி, அம்பிகை சீவரத்தினம், அனுசிறிஸ்குமார் (ராஜன்) ஆகியோர் பாராளுமன்றக் கட்டடத்தினுள் இடம்பெற்ற CPUSL இன் கூட்டத்திற்குள் நுழைய முற்பட்ட போது அனுமதி மறுக்கப்பட்டது.

அதன் பின் கூட்டம் முடிந்து வெளியே வந்தவர்களை புகைப்படம் எடுத்து சீண்டும் முயற்சியில் அங்கையற்கண்ணி இறங்கினார். அப்பகுதியில் புகைப்படம் எடுக்கக் கூடாது என்று குறிப்பிடப்பட்டு இருந்தும் அங்கையற்கண்ணி அதனை உதாசீனம் செய்தார். அங்கு காவலில் நின்ற பொரிசார் அங்கையற்கண்ணியைத் தடுத்து எடுத்த புகைப்படங்களை அழிக்கச் செய்தனர்.

இது ஒரு சாதாரண நடைமுறைச் சம்பவம். அங்கு எந்த புலிகளும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவில்லை. அங்கையற்கண்ணிக்கு தொடர்பில்லாத



திருமதி செல்வரட்ணம் பிரித்தானிய பா உ உடன் உரையாடுகிறார்

தமிழீழ விடுதலை இயக்கங்ளே இலங்கையில் இல்லை என்பது பெரும்பாலும் எல்லோரும் அறிந்த ரகசியம்.

சில தனிநபர்களுக்கு இடையேயான கோபதாபங்களைத் தீர்க்கவும் சிலர் பிரசித்தம் பெறவும் மற்றவர்களது கவனத்தை தம்பக்கம் திருப்பவும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை பயன்படுத்துகின்றனர். இதற்கு சார்பான எதிரான ஊடகங்கள் தூபம் போடுகின்றன. இவ்வாறான செய்திகளில் எந்த சமூக அக்கறையும் இருக்கவில்லை.

மறுமுனையில் இலைமறைகாயாக இருந்து தமது தெளிவானவாதத்தினால் தமது கருத்துக்களை ஏற்கச் செய்தவர்களும் உண்டு. மேற்படி கருத்தரங்கில் கலந்து கொண்ட திருமதி செல்வரட்ணம் என்பவர் இலங்கை அரசின் இனவாதப் போக்கை கண்ணீருடன் பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கினார். தமிழ் அரசு மொழியானது வெறுமனே எழுத்திலேயே உள்ளது நடைமுறையில் இல்லை என்பதை அவர் சுட்டிக்காட்டினார். அதற்குப் பதிலளித்த பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது சொந்த அனுபவங்களினூடாகவும் தாங்கள் அதனை அறிந்து கொண்டதாகத் தெரிவித்தனர். வெளியே இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்திலும் திருமதி செல்வரட்ணத்தின் செயல் காத்திரமானதாக அமைந்தது. இவ்வாறான நாகரீகமான போராட்ட முறைகளை சம்பந்தப்பட்டவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.

## இடம்பெயரும் மட்டு மக்களுக்கு இஸ்லாமிய நலன்புரி அமைப்புகள் ஆதரவு

கடந்த சில வாரங்களாக கிழக்கில் அதிகரித்துவரும் அரசு - புலிகள் யுத்த நெருக்கடிகளால் பாதிப்புற்ற தமிழ் மக்கள் 100,000 வரை தமது பாரம்பரிய இருப்பிடங்களை விட்டு இடப்பெயர்வக்கு உள்ளாகி உள்ளனர். பாதுகாப்பக்கு அதிக அச்சுறுத்தல் காணப்படும் பிரதேசங்களிலிருந்து இவர்கள் அரச கட்டுப்பாட்டிலுள்ள காத்தான்குடி பகுதிகளை நோக்கி நகர்ந்துள்ளனர். வள்ளங்களினூடாகவும் இறங்குதுறைகளின் வழியாகவும் இவர்கள் பயணித்துவருகின்றனர்.

புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த கொக்கட்டிச்சோலைப் பகுதியிலிருந்து மண்முனைப்பற்று பிரதேசத்துக்கு ஏராளமான தமிழர்கள் இடம்பெயர்ந்துள்ள நிலையில், அங்கு ஏற்கெனவே காணப்பட்ட உணவுப்பொருட் பற்றாக்குறை இன்னும் மோசமான நிலைமையை அடைந்துள்ளது. இஸ்லாமிய நலன்புரி அமைப்புகள் இவர்களுக்கான தற்காலிக இருப்பிடம் மற்றும் உணவு வசதிகளை கவனித்து வருகின்றன.

## ராஜீவ் கொலைக் கைதிகளின் மகளுக்கு இந்தியா விசா

ராஜீவ் கொலைக் கைதிகளான முருகன், நளினியின் மகள் மேகராவுக்கு இந்தியா வருவதற்கான விசாவை வழங்கும் படி தமிழ் நாடு நீதிமன்றம் மத்திய அரசுக்கு கட்டளையிட்டு உள்ளது. மேகராவுக்கு இந்தியக் குடியுரிமை வழங்குவது பற்றி அரசு தீர்மானிக்கும் எனவும் அத்தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1992ல் சிறையில் பிறந்த மேகராவுக்கு தற்போது 15 வயது. தயார் இந்தியப் பிரஜை, தந்தை இலங்கையர். மேகரா பிறந்து சில ஆண்டுகளிலேயே தனது தந்தையின் பெற்றோருடன் இலங்கை சென்றிருந்தார். அதன் பின் 2006ல் தான் அவர் இந்தியா வந்து தன் பெற்றோரைப் பார்க்க அனுமதிக்கப்பட்டார்.

## இப்படியும் நடக்கின்றது

அண்மையில் லண்டனில் இடம்பெற்ற கூட்டமொன்றில் சிறிய அளவில் ஒரு நூல் விற்பனை மையமும் இடம்பெற்றிருந்தது. இரண்டு மேசைகளில் ஒன்றில் இலவசப் பத்திரிகைகளும், மற்றதில் விலை மதிப்பமிக்க நூல்களும் வைக்கப்பட்டு விற்பனைப் பிரதிநிதி ஒருவர் அதன் விற்பனையையும் தனியாகக் கவனித்துக் கொண்டிருந்தார்.

திடீரென அங்கு ஒரு பிளாஸ்டிக் பையுடன் முளைத்த பெருமகன் ஒருவர் கேட்டுக் கேள்வியின்றி நூல்களை அள்ளித் தனது பைகளை நிரப்ப ஆரம்பித்துவிட்டார். விற்பனையாளர் அவரை அணுகி விலை மதிப்பிற்காகப் புத்தகங்களின் விபரங்களைக் கேட்டதும் தான் அந்தப் பிரபல பெரிய மனிதருக்கு அவை எல்லாம் விற்பனைக்கென்று விளங்கியுள்ளது போலும், அசடுவழிய அனைத்தையும் ஒப்படைத்துவிட்டு நழுவிவிட்டார்.

இத்தனைக்கும் அவர் எடுத்த நூல்கள் அ.சிவராசா, ரயாகரன், கீதபொன்கலன் போன்றோரின் பிரபல்யமான அரசியல் நூல்கள். தீர விசாரித்ததில் அவரும் ஒரு எழுத்தாளராம்.

இது எப்படி இருக்கு? இதே நிகழ்வில் நூல்களை வாங்காது தவிர்க்கும் பல யுத்திகளில் ஒன்றாக 'கிரெடிட் கார்ட் எடுப்பீர்களோ?' என்ற கேள்வியும் எழுந்துள்ளது. அமைப்பாளர்கள் தபால் செலவை குறைக்கும் வகையில் நூல்களை நிகழ்ச்சியின்போது வழங்கி, தபாலில் சாவதானமாக பணத்தை செலுத்தும் ஒழுங்குகளையும் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

beauty Wholesale Ltd
FREETRESS
World's Finest 100% HUMAN HAIR
World's Most Advanced Synthetic Hair
MILKYWAY 100% HUMAN HAIR
FOR TRADE ENQUIRY CALL 020 8381 2000 / 41

BITTU'S
HAIRS & BEAUTY
Tel: 020 8571 9912
Mob: 0781 882 2226
172 The Broadway Middlesex, Southall, UB1 1NT

was 995 now £495
DimpleFurniture
Unit 17, Metro Centre, Springfield Road
Hayes, UB4 0LE 0208 813 6006
£39 £499

Prestige
WINDOWS & DOORS LTD
Unbeatable Prices & Quality
Call for free Quote
Fensa Registered
T: 020 8503 4731
F: 020 8548 0466
Windows make houses
REHAU Window design
156 - 158 KATHERINE ROAD
EASTHAM LONDON E6 1ER
prestigewindows@hotmail.co.uk

A&G WINDOWS LTD
Manufacturers & Installers of Quality Double Glazing in U.P.V.C. Windows, Doors, Patio Doors, Porches, Conservatories
FREE ESTIMATE
Unit6, Derby Road, Hounslow
Middx TW3 3UH
Tel: 020 8572 5567

VISION PROPERTY & MORTGAGES 020 8848 4030
www.visionestate.co.uk
- Purchase/Re-mortgages100%
- Up to 95% Buy-to-Let mortgages
- 100% commercial Loan-Shop/Restaurant
- Country court Judgements/Default/arrears
- No ProofIncome, No Proof Accounts, Any Citizen No Problem
- Full Management & Maintenance Commercial Property
Mortgage is not a cost - an investment with long time benefit
So why not pop in today to find our more
Vision Property & Mortgages
1104 Uxbridge Road,
Hayes Middlesex, UB4 8QH
Raju: 07862 229 579
Tel. 020 8848 4030
Fax. 020 8848 3960

PAMIR CARPETS & FURNITURES
SPECIAL OFFER
Laminate flooring from £6,99 per sqm
3 Bed Full House Carpet, Underlay & fitting £499 only
Free Estimating Delivery Fitting Underlay
020 8578 5080
405-407 Greenford Road Greenford


### பிரித்தானிய பாராளுமன்ற எம்பி களுடன் தமிழ் . சிங்கள . முஸ்லீம்

# பிரதிநிதிகள் உள்ளே சந்திப்பு! தமிழ் குழு வெளியே எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்!

இலங்கையில் அனைத்து சமூகங்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய பன்மைத்துவம் மிக்க அரசியல் தீர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என பிரித்தானிய பாராளுமன்ற அறையில் பிரித்தானிய எம் பி க்களுடனான சந்திப்பில் இலங்கை தமிழ், சிங்கள, முஸ்லீம் பிரிதிநிதிகள் தெரிவித்தனர். இலங்கையில் சமாதானத்தை முன்னெடுப் பதற்கான வழியும் மீள்பரிசீலினையும் - The way forward to peace and reconciliation in Sri lanka என்ற தலைப்பிலான சந்திப்பிலேயே இக்கருத்து தெரிவிக்கப்பட்டது. மார்ச் 19ல் ஏற்பாடு செய்யப்பட்ட இச்சந்திப்பு இலங்கைக்கான சர்வகட்சிக்குழுவின் இணைத் தலைவர் Lord Naseby தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. வி புலிகள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் அல்ல என்றும் அரசியல் பிரதிநிதிகள் அங்கு கருத்து வெளியிட்டனர்.

Campaign for Peace & Unity in Sri lanka - CPUSL என்ற அமைப்பு ஏற்பாடு செய்திருந்த இச்சந்திப்பில் MP Mr Andrew Love, MP, Mr Geoffrey Van Orden, MEP, Mr Andrew Pelling, MP, Mr Barry Gardiner, MP, Mr Colin Breed, MP, Mr John Austin, MP, Mr Douglas Wickremaratne, Mr V Anandasangaree and Mr N U M Ameen ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதேசமயம் கருத்தரங்கு இடம்பெற்ற பாராளுமன்றக் கட்டத்திற்கு வெளியே சிறிய தமிழ் குழுவினர் அடையாள




எதிர்ப்பு ஒன்றை மேற்கொண்டனர். இதில் வழமையான ஏற்பாட்டாளர்களான ராஜன் (செல்லமாக ரவுடிராஜன் என்று அறியப்பட்டவர்), கவுன்சிலர் தயா இடைக்காடர், லண்டன் பாபா சுரேஸ், அங்கையற்கண்ணி, முருகானந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (பக்.6) விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இலங்கை அரசுக்கும் அதனுடன் இணைந்து இயங்கும் தமிழ் சக்திகளுக்கு எதிராகவும் இவ்வார்ப்பாட்டம் இடம்பெற்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி பிரித்தானிய பா உ க்களுக்கு சமாதானம் கதவைத் தட்டுவதாகவும் அதனை திறந்து உள்ளே விடவேண்டும் என்ற தனது வழமையான இந்திய அமைப்பை (Indian Model) விளக்கினார்.

மொழி பிரதான பிரச்சினையாக கலந்துரையாடலில் விவாதிக்கப்பட்டது. இது விடயத்தில் பிரித்தானிய பா உ க்கள் இலங்கை அரசின் அசிரத்தையை தங்கள் அனுபவங்களுக் கூடாகவும் அங்கு சுட்டிக்காட்டினர்.

சரியோ பிழையோ பிரித் தானியர்கள் இலங்கையை ஒன்றாக்கினார்கள் ஆனால் தனிச் சிங்களச் சட்டம் நாட்டைப் பிரித்தது என்று டொக்டர் நிக்கலஸ் பிள்ளை குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில் இலங்கை யில் தேசியத் தலைவர்கள் உருவாகவில்லை என்றும் எங்களுக்கு இலங்கை முழுமையான தேசமாக வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பேச்சு வார்த்தையில் முஸ்லீம் பிரதிநிதித்துவம் அவசியம் வேண்டும் என்றும் அங்கு சுட்டிக்காட்டப்பட்டது.



மேலும் நிதி சேகரிப்பு, தடை செய்யப்பட்ட அமைப்புடன் கவுன்சிலர்கள் தொடர்பில் இருப்பது என விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடை முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை என சிலர் சுட்டிக்காட்டினர். இது கவனத்தில் எடுக்கபடும் என பிரித்தானிய பா உ க்கள் அங்கு உறுதி அளித்தனர்.



இந்தியாவின் லால்குடி பரம்பரையைச் சேர்ந்த வீணை ஜெயந்தி குமரேஷ் அவர்களின் வீணை வாத்திய இசைக் கச்சேரி, லண்டன் பாரதிய வித்ய பவனில் கடந்த மார்ச்மாதம் 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

Ellis & Co Residential Sale & Letting
வீடு வாடகைக்கோ, விற்கவோ, வாங்கவோ மேலும் Mortgage தேவைக்கோ நீங்கள் உடன் தொடர்பு கொள்ளவும்
Kumar on
(T) 020 8204 3300
(F) 020 8206 1102
(M) 07984 184064
email: kenton@ellisandco.co.uk
272, Streatfield Road, Kenton, Harrow

Avis Property Agents
Sales, Lettings Commercial and Management
MORTGAGE AVAILABLE
PROPERTIES FROM LANDLORDS FOR PROF. TENANT
COMPETITIVE RATES
SALES, LETTINGS
MANAGEMENT
69, HEADSTONE GARDENS, HARROW, HA2 6PJ.
Tel/ Fax: 020 8424 9911 Mobile: 07956 362 179
Web Site: www.avis4u.co.uk Email: info@avis4u.co.uk

JMW
SHOPFRONTS & SHUTTERS LTD
JMW SHOPFRONTS & SHUTTERS LTD
Unit 34-35-36 Barkingindustrial Park
Alfreds Way Barking Essex IG11 OTJ
Tel: 020 8591 5760 / 020 8591 7637
Fax: 020 8591 2833
Email: jmw_shopfronts@hotmail.com

SAVER STORES CASH &CARRY LTD.
Specializing in soft drinks beers, wines & spirits! As well as food products, household and much more in store...
20 Kynoch Road, Eley Trading Estate, Edmonton, N18 3BD
T. + 44(0)208 884 2800 F. + (0)208 807 4081

Shyam JEWELLERS
Exporters, Importers & Wholesale of 22 Ct. Gold Jewellery
178 Ealing Road, Wembley
Middlesex HA0 4QD
Tel: 0208 900 0194
Fax: 0208 903 8790
Email: Shyamjewellers@hotmail.com

SUKHDEV`S
"If you can imagine it, we can create it"
Sukhdev's Catering Services LTD
125 Soho Road Handsworth
Birmingham B21 9ST
Tel: 0845 130 0042
Fax: 0121 554 1211
www.sukhdevscatering.com
www.sukhdevsfood.com

MANUFACTURING LTD
T:020 8571 0043/020 8574 2571 F:020 8843 0746
220 Uxbridge Road, Southhall, Middx UB1 3DZ
mbs
-Durable-Unbeatable Price-Free Design & Delivery-5 Years Guarantee-All Units Made from 18mm
Heating & Plumbing supplies, Bathroom Showers & Sanitary Ware, Fitted Kitchens, Bedroom Furniture, Marble & Granite Floors, Worktops, Tiles & Other Products
mbsmanufacturing@btconnext.com
mbsgroupcompanies.com

Panesar Electrical Co.
EST 1981
· Wylex 9 Way Split Load
· RCD+Main Switch
· 9 MCBs
ONLY £60
· Lux 10 Way Split Load
· RCD+Main Switch
· 10 MCBs
ONLY £39.50
· Lux 6 Way Split Load
· RCD/M/SU
· 6MCBs
ONLY £35
2 Gang 13a Sotcekts from £0,95
4 Inch Timer Fans from £9,95
2 Gang 13a Chrome Socket from £5
9 Inch Pendants from £0,95
www.lowvoltagedownlights.com pan77@hotmail.co.uk
362 - 364 HIgh Street, North Manor Park, London E12 6PH
Tel: 020 8472 1873 Fax: 020 8471 6271

# UNBEATABLE PRICES

*** TILES * MARBLE * GRANITE * KITCHENS * BATHROOM * WOODFLOORING * FURNITURE**

MASSIVE SALE




MASSIVE SALE

ELITE TILES are undeniably UK's No.1
Importers, Distributors, Wholesalers and Retailers
of







*Specialists in Granite Worktops and Marble Vanity Tops to order*




## £2 MILLION POUNDS OF AVAILABLE STOCK TO CLEAR

(collect same day)

Web Site: www.elite-tiles.co.uk

**020 8202 1806 (12 lines)**
**020 8202 8608 (Fax)**

**Elite House, The Broadway,**
**West Hendon, London, NW9 7BP**

Open Mon-Fri 8.30am-6pm – Sat 10am-5pm – Sun 10am – 2pm

# லண்டனில் இன உறவுகளை வலுப்படுத்த முயற்சி

இன உறவுகளை வலுப்படுத்தவும் அதைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவவுமான கருத்தரங்கு தேசம் சஞ்சிகையினால் மார்ச் 10, நடத்தப்பட்டது. நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் பத்திரிகையாளர் - ஊடகவியலாளர் - பதிகப்பாளர் எம் பீ புன்னியாமீன் இலங்கையில் இருந்து வந்து கலந்து கொண்டார். இன உறவுகளைக் கருத்தில் கொண்டு இவ்வாறான கலந்துரையாடல் இடம்பெற்றது இதுவே முதற் தடவையாகும்.

ரி கொன்ஸ்ரன்ரைன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வு நவஜோதியின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகியது. சிறுப்புரை வழங்கிய புன்னியாமீன் இலங்கையில் தமிழ் - முஸ்லீம் இனஉறவுகள் வளர்க்கப்படுவதன் அவசியத்தையும் அவசரத்தையும் எடுத்து விளக்கினார். தமிழ் - முஸ்லீம் அரசியல் அமைப்புகள் தங்கள் சுய அரசியல் லாபங்களுக்காகவே செயற்படுகின்றன என்று குற்றம்சாட்டிய புன்னியாமீன் தமிழ் - முஸ்லீம் மக்கள் ஒருவரை ஒருவர் பயங்கரவாதிகளாகப் பார்ப்பதைத் தவிர்த்து இருவரும் தங்கள் பிள்ளைகளுக்கு நட்புறவை ஊட்டி இனஉறவுகளை தமது வீட்டில் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.


தேசம் சஞ்சிகைகளில் வெளியான முஸ்லீம்கள் சம்பந்தப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப் பட்ட 'தமிழ் - முஸ்லீம் இனஉறவுகள்' என்ற தேசம் சிறப்பு மலரை ரி சோதிலிங்கம் ஆய்வு செய்தார். நூலை கவுன்சிலர் போல் சத்தியநேசன் வெளியிட்டு வைத்தார்.

வரலாற்று ரீதியாக முஸ்லீம் மக்களின் இருப்பு என்ற தலைப்பில் பேசிய மூன்றாவது மனிதன் ஆசிரியர் பௌசர் முஸ்லீம்களின் வரலாற்றுப் பின்னணியையும் தமிழ் மொழியை மதிக்கும் அதேசமயம் முஸ்லீம்களின் தனித்துவத்தையும் எடுத்துக் கூறினார். சிறிலங்கா முஸ்லீம் போறம் அமைப்பின் தலைவர் நஜா மொகமது முஸ்லீம் தேசியவாதமும் முஸ்லீம் மக்களும் என்ற தலைப்பில் பேசும் போது முஸ்லீம்கள் தனித்துவமான மத அடையாளத்தைக் கொண்ட தனி இனம் என்று குறிப்பிட்டார்.

தமிழ் தேசியவாத மும் தமிழ் மக்களும் என்ற தலைப்பில் உரையாற்றிய சட்டவல்லுனர் சி ராஜேஸ்குமார் தமிழ் தேசியவாதத்தின் ஆபத்தான போக்கினைச் சுட்டிக்காட்டினார். தமிழ் - முஸ்லீம் உறவுக்கான தடைகளும் அதை நீக்குவதற்கான வழிவகைகளும் என்ற







கலாபூஷணம் எம் பி புன்னியாமீன்

தலைப்பில் பதூர் சமன் தனது சொந்த அனுபவங்களுக் கூடாக பேசினார். எஸ் எஸ் எம் பாரூக் இனஉறவுகளை வளர்ப்பதில் ஊடகங்களின் பங்களிப்பைச் சுட்டிக்காட்டினார். முஸ்லீம்களுக்கு எதிராக அநீதிகள் இழைக்கப்பட்ட போது தமிழ் தேசிய ஊடகங்கள் அதற்கெதிராக குரல் எழுப்பவில்லை என்று குற்றம்சாட்டினார்.

சர்வகட்சி மாநாட்டில் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டங்கள் என்பதை ஆய்வு செய்த ஆய்வாளர் வி சிவலிங்கம் சர்வகட்சிக்குழுவின் பெரும்பான்மை நிபுணர்கள் குழுவாலும் விதாரனவினாலும் முன்வைக்கப்பட்டு உள்ள தீர்வுத் திட்டத்தின் அடிப்படையில் ஒரு சமாதானத் தீர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதை அவர் வலியுறுத்தினார்.

இலங்கை இனஉறவுகளின் எதிர்காலம் என்ற தலைப்பில் கல்வியியலாளர் ஈரோஸ் ரவி சுந்தரலிங்கம் பேசும் போது இலங்கையில் தமிழ், சிங்களம் ஆகிய இரு இனங்களே இருப்பதாகவும் இனங்கள் மதத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட முடியாது என்றும் ஒரு இனத்தின் அடிப்படை மொழியே என்றும் கூறினார்.

'இனப்பிரச்சினைக்கான தீர்வும் முஸ்லீம்களின் நிலைப்பாடும்' என்ற தலைப்பில் பேசிய சட்டவல்லுனர் எஸ் எம் எம் பசீர் தமிழ் - முஸ்லீம் இரு வேறுபட்ட இனங்கள் என்பதை ஏற்றுக் கொண்டே வேற்றுமையில் ஒற்றுமை காண வேண்டும் என்று குறிப்பிட்டார்.

கூட்டத்தின் முடிவில் தொகுப்புரை வழங்கிய கலாநிதி சித்திக் முஸ்லீம்கள் தனியான ஓர் இனம் என்றும் தமிழ் - முஸ்லீம் இனங்களுக்கிடையே புரிந்துணர்வு ஏற்பட வேண்டும். அதனைத் தொடர்தே இன உறவுகள் வளர்த்தெடுக்கப்பட முடியும் என்றும் தெரிவித்தார்.

முஸ்லீம் என்பது மதத்தை அடையாளப்படுத்துவதாக வும் சோனகர் என்பதே தமிழ்மொழி பேசும் முஸ்லீம்களின் இனம் என்றார் நிஸ்தார் மொகமட். ச முருகையா கருத்துத் தெரிவிக்கையில் மலையகத் தமிழர்களும் உள்ளடக்கப்படுவதன் அவசியத்தை சுட்டிக்காட்டினார். சேனன் கருத்துத் தெரிவிக்கையில் தமிழ் தேசியவாதத்தின் பாசிசப் போக்கு முஸ்லீம் மற்றும் சாதிய பிரிவினரை ஒடுக்குவதை சுட்டிக்காட்டினார். மேலும் இன உருவாக்கத்திற்கு மொழி அடிப்படை இல்லை என்றும் அவர் தெரிவித்தார். இதே கருத்தை ச வேலுவும் வலியுறுத்தினார்.

கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் இந்நிகழ்வின் இறுதியில் கீழ் தீர்மானத்தை நிறைவேற்றினர்.

1.இரண்டு தசாப்தகால யுத்தம் தமிழ் - முஸ்லீம் உறவுகளை பாரதூரமாகப் பாதித்துள்ளது.

2.இது மேலும் தொடராமலிருக்க புரிந்துணர்வும் நல்லுறவும் ஏற்படுத்தப்படுவது அவசியம்.

3.பல்வேறு சமூக, பிரதேச பிரிவுகளையும் சமத்துவமாக மதித்து, உள்வாங்கி உடனடியாக அரசியல் தீர்வை அரசு முன்வைக்க வேண்டும்.

4.இந்த அரசியல் தீர்வு நிபுணர்களின் பெரும்பான்மை குழுவினதும் விதாரனவினதும் அறிக்கைகளின் அடிப்படையில் அமைய வேண்டும்.

இத்தீர்மானம் கலந்துகொண்டவர்களின் மிகப் பெரும்பான்மையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.



நஜா மொகம்மட்



பதுர் சமன்

OM Jewellers
Specialists in 22 Karat Gold & Diamond Jewellersy
25 King Street Southall Middlesex UB2 4DG
020 8574 6388 www.omjewellers.net

scenic Tours and Travel
Special Fares to
Bangalore, Chennai, Colombo, Hyderabad, Bombay, Calcutta, Delhi, Trivandrum
542 Kingsbury High Road, London NW9 9HH
Tel: 020 8204 9222
E-mail: info@scenictoursandtravel.com
www.scenictoursandtravel.com

BARKING SHOPFRONTS LTD
Tel: 020 8591 0504 or 020 8594 0723 (6Lines)
Fax: 020 8594 3060
www.barkingshopfronts.co.uk
POWDER COATED & ALUMINIUM SHOPFRONTS
ELECTRIC & MANUAL SHUTTERS
SIGNS - SECURITY GRILLES
GLAZING REPAIRS / MAINTENANCE AGREEMENT
THE COMPLETE SHOPFITTING SERVICE AT COMPETITIVE PRICES
UNIT 1, BARKING INDUSTRIAL PARK, ALFREDS WAY, BARKING, ESSEX 1G11 0TJ (MAIN ENTRENCE FROM RIPPLE ROAD)

J.M. Shopfitters
warm | welcoming | creative
The right job, at the right place, at the right time...
Call us for an estimate& advice in any area
Unit Ic, Barking Industrial Park, Alfreds Way, Barking, Essex IG11 OTJ
t. 020 8591 5842
f. 020 8591 5116
www.jmshopfitters.co.uk

TRICO SHIPPING WORLDWIDE
Small cartons and large container
Full House packing and shipping to any destination of your choice.
Specian Rates: COCHIN, TREVENDRAM BOMBAY - CHENNAI
* Two regular shipments to Colombo per month
* Good arrive within 17 days
20 YEARS IN SERVICE
Call us for a friendly personal service
Tel: 020 8888 8787
Fax: 020 8888 5445
E-mail: tricko@btclick.com
Unit 4, Bitten Place, Coburg Road, Wood Green London N22 6TP

THE Today's GROUP hothi Hothi Cash & Carry Ltd.
35-37 Park Royal Road, Park Royal, London NW10 7LQ T.020 8965 2428 F.020 8553 1097
Suppliers of wines, beers and spirits
Wide range of product available at very competitive prices.

# இலங்கையில் அதிகரிக்கும் மனித உரிமை மீறல்களும் சர்வதேச அழுத்தமும்

சிறுபான்மை இனங்களுக்கு மிக ஆபத்தான நாடுகளில் ஒன்றாக இலங்கை மாறியுள்ளதை நியூயோர்க் ஐக்கிய நாடுகள் சபையில் வெளியிடப்பட்ட Minority Rights Group International, அறிக்கை உறுதிப்படுத்தி உள்ளது. மார்ச் 27ல் வெளியிடப்பட்ட 'State of the World's Minorities' அறிக்கையில் முன்னைய ஆண்டில் 47வது இடத்தில் இருந்த இலங்கை 2007ல் ஆபத்தான முதல் இருபது நாடுகளுக்குள் அடக்கப்பட்டு உள்ளது.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் செயலற்றுப் போய் பேச்சு வார்த்தை முறிவடைந்தமையும் அதனைத் தொடர்ந்து இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல்கள் இலங்கையின் இன உறவுகளை மிகவும் பாதித்துள்ளது.

மேலும் ஏப்ரல் 28ம் திகதி சர்வதேச கிரிக்கெட் போட்டிகளையொட்டி 'Sri Lanka! Play by the Ruels' என்ற தலைப்பிலான போராட்டம் ஒன்றை சர்வதேச




மன்னிப்புச் சபை மேற்கொள்ள உள்ளது. கிரிக்கெட்டில் அம்பயர் அல்லது றெப்றியைப் போல் இலங்கையில் சுயாதீன மனித உரிமைக் குழுக்கள் சுயாதீனமாக இயங்க இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் மற்றும் ஆயுதக் குழுக்களும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென சர்வதேச மன்னிப்புச் சபை கோரி உள்ளது. அரசும் புலிகளும் மற்றும் குழுக்களும் விதிமுறைகளுக்கு அமைய செயற்பட வேண்டுமென அக்கோரிக்கையில் கேட்கப்பட்டு உள்ளது.

இந்த சுயாதீன மனித உரிமை அமைபபுகளை சுயாதீனமாக நடுவர்களாக இயங்க அனுமதிப்பதன் மூலம் முரண்பாட்டில் சம்பந்தப்பட்டவர்கள் விதிமுறைகளை மீறுவதைக் கட்டுப்படுத்தலாம் என சர்வதேச மன்னிப்புச் சபை கருதுகிறது. அரசு, புலிகள், மற்றும் குழுக்கள் புரியும் மனித உரிமை மீறல்களைப் பதிவு செய்வது, அதனை பிரச்சாரப்படுத்துவது, சம்பந்தப்பட்டவர்களை நீதிக்கு முன் நிறுத்துவது போன்ற நடவடிக்கைகள் மூலம் மனித உரிமை விதிகளுக்கு அமைய சம்பந்தப்பட்டவர்களை செயற்பட வைக்க முடியும் என சர்வதேச மன்னிப்புச் சபை கருதுகிறது.

கிரிக்கெட் பந்துகளில் கையெழுத்துக் களைப் பெற்று அதன் வீடியோ, மற்றும் புகைப்படங்களை இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் காண்பித்து அவர்களுக்கு அழுத்தம் கொடுக்கப் போவதாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவிக்கிறது.

# புலத்தை எட்டாத அவலம்

## அகதிகள் நகராகக் காட்சியளிக்கும் மட்டுநகரும் மறக்கப்பட்ட மக்களும்

இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்

தொடர்ந்து நடைபெறும் போர்ச் சூழ்நிலையால், உண்ண உணவின்றி, இருக்க இடமின்றி, மாற்று உடையின்றி, நோய்க்கு மருந்தின்றித் தவிக்கும் ஏழைத்தமிழ் மக்களுக்கு உதவி கேட்டு ஐக்கிய நாடுகள் சபைச் செயலாளர் நாயகம் அறிக்கை விடுத்திருக்கிறார். இதுவரை ஒன்றரை இலட்சத்துக்கு மேலான தமிழ் மக்கள் போர் தொடரும் பிரதேசங்களான, வாகரை, உன்னிச்சை, தாண்டியடி, முனைக்காடு, மண்டூர், கொக்கட்டிச்சோலை, தொப்பிக்கல போன்ற பகுதிகளிலிருந்து ஆயிரக்கணக்கான தமிழ்மக்கள் ஒவ்வொரு நாளும் தங்கள் வீடுகள் உடமைகளை யிழந்து தங்கள் உயிரைக்காப்பாற்ற மட்டக்களப்பின் பல பக்கங்களுக்கும் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். அவசர தேவைகளுக்காக, இலங்கைக்கென்று ஒதுக்கப்பட்ட 66.1 மில்லியன் பணத்தில் இதுவரை 26 மில்லியன் மட்டும் சேர்ந்த்திருப்பதாகவும், அகதிகளுக்குத் தேவையான உதவிகளைச் செய்ய இந்த நிதி போதாதென்றும் ஐக்கிய நாடுகளின் சபை அறிவித்திருக்கிறது.

விடுதலைப் புலிகளை வெற்றிகொள்ளும் வரை தாக்குதல்கள் தொடரும் என்பதை அரசாங்கம் நிருபிக்கிறது. இரத்த ஆறு பெருகினாலும் எங்கள் போராட்டத்தை தொடர்வோம் என்று விடுதலைப் புலிகளின் பத்திரிகைகள் சொல்கின்றன. போர் தொடுக்கும் இரு பகுதியினரிடமிருந்தும் தங்கள் உயிரைக் காப்பாற்ற ஆயிரக்கணக்கான அகதிகள், பாதுகாப்புக்காக அரச பாதுகாப்பீடங்களுக்கு ஓடிவருகிறார்கள்.

கிழக்கிலங்கை நிலைபற்றி நான் தொடர்பு கொண்டபோது, 'மட்டக்களப்பு அகதிகள் நகராகக் காட்சியளிக்கிறது' என்று சொன்னார்கள். அடிப்படைத் தேவைகளான குடிநீர், மலசலகூட வசதிகள், உணவு என்பன மிகவும் தட்டுப்பாடான நிலையில் இருப்பதாகவும் கூறப்பட்டது. அரசாங்கம் தயார் செய்த 25,000 மக்களுக்குத் தேவையான அகதி முகாம்களில் ஒரு இலட்சத்துக்கு மேலான மக்கள் குவிந்திருப்பதாகவும் கூறப்படுகின்றன.



திருகோணமலை - மட்டக்களப்பு ஆயர் ஜேம்ச் கிங்ஸ்லி சுவாமிப்பிள்ளை அவர்கள் மிகவும் பரிதாபமாகவும் இக்காட்டான நிலையிலும் வாடும் அகதிகளின் நிலை பற்றி அறிக்கை விட்டிருக்கிறார். இலங்கை அரசாங்கம் வெளியிடும் அறிக்கைகளில் உள்ள அகதிகள் தொகையைவிடப் பல மடங்கு அகதிகள் மட்டக்களப்பின் பல பகுதிகளிலும் திக்கற்று ஓடிக்கொண்டிருக்கிறார்கள் என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.



இன்று, மட்டக்களப்புப் பகுதியில் (16.03.07) தொடர்பு கொண்டபோது, அரசாங்கத்தின் உதவி மிகவும் சிறு அளவிற் மட்டும் கிடைப்பதாகச் சொல்லப்பட்டது. சில இடங்களிலிருந்து மக்கள் வெளியில் தப்பிச்செல்ல முடியாத நிலையில் இருப்பதாகவும், உதவி செய்யப் போக (முடியாமல் இருப்பதாகவும் சொல்லப்பட்டது. பாடசாலை மாணவர்கள் அரச படையின் மல்றிபரல் குண்டின் அதிர்ச்சியால் காது செவிடாகி இருக்கிறார்கள். வயது குறைந்தவர்களும் வயது கூடியவர்களும் இந்த மல்றிபரல் தாக்குதல்களால் மிகவும் கொடுமையாகத் தாக்குப்படுகிறார்கள்.

அரச படையின் மல்றிபரல் குண்டுகளின் தாக்கம் போர் நடக்கும் பகுதிகளில் மட்டும ல்லாது அதைச் சூழவுள்ள பகுதி மக்களையும் தாக்குகிறது. கர்ப்பவதிகளுக்கு இந்த மல்றிபரல் குண்டு தாக்குதல்களின் அதிர்ச்சியால் கர்ப்பச்சிதைவுகள் நடக்கின்றன. இலங்கையில் ஏற்கனவே, பலதரப்பட்ட காரணிகளால் ஒரு நாளைக்கு 800 - 1000 வரையிலான கர்ப்பச சிதைவுகள் நடப்பதாக குழந்தைகள் சேவை அதிகாரி அபேய் குணவார்த்தன சொல்லியிருக்கிறார். இன்று நடக்கும் குண்டுகளால் இந்நிலை மிகவும் மோசமடைந்திருக்கிறது. அத்துடன் தொடரும் அகதிகள் பிரச்சினையால், பல உடல் உள நோய்களுக்கும் மக்கள் முகம் கொடுக்கவேண்டியிருக்கிறது.

குண்டடியின் அதிர்ச்சியால் சத்தியும் வாந்தியும், சாப்பிட மனமின்மையும் அகதிகளிடையேயும் போர்ச்சூழலில் வாழ்பவர்களிடையேயும் பரவலாகின்றன. அதையொட்டிப் பல நோய்கள் உண்டாகும் வாய்ப்புக்கள் உண்டாகின்றன. தொடரும் போரால் பசி பட்டினி மட்டுமல்லாது, எதிர்காலம் பற்றிய சிந்தனைகளால் மனநோய்களும் தொடர்கின்றன.

இன்று நடப்பது ஒரு அரசியற் சுனாமி. மக்கள் தங்கள் உயிரைக்காப்பாற்ற எட்டுத்திக்கும் நிலை கெட்டு ஓடிக்கொண்டிருக்கிறார்கள். இன்று கிழக்கிலங்கையில் இன மத பேதமற்று முஸ்லிம், கத்தோலிக்கத் தலைமைகள் ஏழைத்தமிழ் அகதிகளுக்கு உதவுகின்றன.

காத்தான் குடிப்பள்ளி வாசல்களில், முஸ்லிம் மதத்தலைவர்களின் வேண்டுகோளுக்கிணங்க முஸ்லிம் மக்கள் தங்களானான உதவிகளை அகதிகளுக்குக் கொண்டுவருகிறார்கள். தமிழ்ப் பகுதிகளிலுள்ள சமூக அமைப்புக்கள், பெண்கள் அமைப்புக்கள், மத அமைப்புக்கள் தங்களானான உதவிகளைச் செய்கிறார்கள். எங்களான உதவிகளை நாங்களும் செய்யலாம். எங்கே, யாருக்கு அனுப்புவது என்ற கேள்விகளைக்கேட்டுக் குழம்பவேண்டாம். மட்டக்களப்பு நகரத்திலும் அதச்சூழவுள்ள இடங்களிலும் பொதுப்பணிகளில் ஈடுபட்டும், உங்களுக்குத் தெரிந்த மத, சமூக ஸ்தாபனங்களுடன் தொடர்புகொண்டு உங்களால் முடிந்தவற்றைச் செய்து அல்லலுறும் ஏழைகளுக்கு உதவுங்கள்.

வைத்திய வசதிகள் என்பது மிகக்குறவு என்று எனக்குச் சொல்லப்பட்டது. இதனால் தொற்றுநோய்கள் எந்த நேரமும் பரவி, அரசின் மல்றிபரலுக்குத் தப்பி வந்த உயிர்களைப் பலிவாங்கலாம்.

கடந்த மூன்று மாதமாகத் தொடரும் போர்ச்சூழலில் கிட்டத்தட்ட 130,000 - 150,000 கிழக்கிலங்கை மக்கள் அகதிகளாக்கப்பட்டு இருக்கிறார்கள். கிட்டத்தட்ட 95 வீதமானவர்கள் மிகவும் ஏழைகள், கூலிகள், அன்றாடம் காய்ச்சிகள், வயல்களில் வேலை செய்பவர்கள். மேற்கு நாடுகளில் உறவினர்களற்றவர்கள்.

தொடரும் போரை நிறுத்திவிட்டுச் சமாதானதிற்கான பேச்சுவார்தையைத் தொடங்கச் சொல்லிப் பிரித்தானிய வெளிவிவகாரச் செயலாளர் நாயகர் (மார்க்கரெட் பெக்) உட்படப் பல்ரும் பல நாடுகளும் சொல்லியும், இலங்கையில் போர் புரிபவர்களைப் பொறுத்தவரையிலும், சமாதானத்தை எதிர்பார்த்திருக்கும் மக்களைப் பொறுத்த வரையிலும் சமாதானம் பற்றிய பேச்சுக்கள் மிகவும் நீண்ட தூரத்திலேயே தெரிகிறது.

இந்தப் போர்க் கொடுமையிலிருந்து, கடல் கடந்து இந்தியா போவோரைச் சந்தேகத்துடன் கைதுசெய்கிறது இந்திய அரசு. எங்கும் தப்பிப் போகமுடியாது இலங்கையில் தத்தளிக்கும் தமிழ் அகதிகளுக்கு உதவுவது எங்கள் கடமை. எங்களுக்குள், இன மத, அரசியல் பேதங்கள் என்று எத்தனையோ இருந்தாலும் அதையெல்லாம் மறந்து, அல்லலுறும் மக்களுக்கு உதவுவது மனித தர்மமாகும்.

படங்கள்: இணையத் தளங்கள்

### இணையத்தளச் செய்தியாளர்களுக்கு கட்டுப்பாடு:

# பிரான்சில் புதிய சட்டம்

பிரான்சில் புதிய சட்டமூலம் ஒன்று நடைமுறைக்க வருகின்றது. துறைசார் செய்தியாளர்கள் தவிர்ந்த எவரும் வன்முறைக் காட்சிகளை வீடியோ படம் எடுத்து இணையத்தளங்களில் செய்திப்படங்களாக வெளியிடுவதும் விநியோகிப்பதும் குற்றச்செயலாக அச்சட்டமூலம் இனம்காண்கிறது. Happy Slapping என்ற பெயரில் பரவிவரும் இளையோரிடையேயான வன்செயல்களை பிரான்சில் கட்டுப்படுத்தும் முயற்சிகளில் ஒன்றாக இச்சட்டமூலம் அமுலுக்கு வருகின்றது.

CPJ எனப்படும் ஊடகவியலாளர் பாதுகாப்புக் குழு இச்சட்டமூலத்தையிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில், அரசாங்கம் ஊடகவியலாளரை கட்டுப்படுத்துவதாகக் குற்றம் சாட்டியுள்ளது. யார் செய்தியை தரவெண்டும், யார் தரக்கூடாது என்ற உத்தரவை அரசங்கம் பிறப்பிப்பதானது பத்திரிகைச் சுதந்திரத்தில் கைவைப்பதாகும் என்று அவ்வறிக்கை குறிப்பிடுகின்றது.

### ஐ.நா.வின் மனித உரிமைகள் கவுன்சிலின் செயற்பாடுகள்:

## சர்வதேச மன்னிப்புச் சபை கேள்வி எழுப்புகிறது

2005இல் ஐக்கிய நாடுகள் சபையினால் உருவாக்கப்பட்ட மனித உரிமைகள் கவுன்சிலின் செயற்பாடுகளையிட்டு சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் ஐரின் கான் கேள்வி எழுப்பியுள்ளார்.




மனித உரிமைகள் கவுன்சிலின் நான்காவது கூட்டத்தொடரில் பேசும்போது, ஐரின் கான், மீள் அமைப்புக்குள்ளான ஐக்கிய நாடுகள் சபையின் 2005ம் ஆண்டுக்குரிய மிக முக்கிய செயல்திட்டமாக உருவாக்கப்பட்ட மனித உரிமைகள் கவுன்சிலின் கட்டுமான வேலைகளில் கவனத்தைச் செலுத்திவரும் நிலையே இன்றுவரை காணப்படுவதாகவும், குறைப்பிரசவமாகப் பெற்றெடுத்த இவ்வமைப்பின் நோக்கங்களை எய்துவதற்கான செயற்பாட்டுத் திட்டங்கள் அனைத்தும் கடந்த ஒன்பது மாதங்களாக உறங்குநிலையில் உள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்நிலை மாறி விரைவில் மனித உரிமைகள் கவுன்சிலின் உலகளாவிய மனித உரிமைகள் பாதுகாப்புச் செயற்பாடுகளில் அக்கறைசெலுத்தாவிட்டால் இவ்வமைப்பின் இருப்பே கேள்விக்குறியாகிவிடும் என்றார்.

## தமிழ்நாட்டில் பெண் பாலியல் தொழிலாளர்களுக்கு பெண்ணுறைகள்

தமிழ்நாட்டில் பெண் பாலியல் தொழிலாளர்களுக்குப் பெண்ணுறையை விநியோகிக்கும் பாரிய திட்டத்தை தமிழக அரசின் எய்ட்ஸ் கட்டப்பாட்டு மையமும், சில தொண்டர் நிறுவனங்களும் இணைந்து அமுல்படுத்திவருகின்றன.

தமிழக மாநிலத்தில் இருக்கும் 300 பெண் பாலியல் தொழிலாளர்களுக்கு அடுத்த நான்கு மாத காலத்தில் 60,000 பெண்ணுறைகள் மலிவு விலையில் விநியொகிக்கப்பட இருக்கின்றன. இவர்கள் மூலம் HIV கிருமிகள் பரவுவதைத் தடுக்கும் வகையில் இத்திட்டம் பரீட்சார்த்தமாக




## சன் தொலைக்காட்சி நிறுவனத்தின் பங்குச்சந்தைப் பெறுமானம் அதிகரிப்பு

சென்னையைத் தளமாகக்கொண்ட சன் தொலைக் காட்சியின் பெறுமதி 70 வீதம் அதிகரித்து பெரும்பாய்ச்சல் கண்டநிலையில் சண் டிவி உரிமையாளர் மாறனை ஓரிரவில் கோடிஸ்வரனாக்கி உள்ளது.



இம்மாத ஆரம்பத்தில் 875 ரூபாவாகவிருந்த பங்குகள் வழங்கப்பட்ட சில நிமிடங்களுக்குள் 1445 ரூபாவுக்கு உயர்ந்து விட்டன. முதல் பதினைந்து நிமிடங்களுக்குள் 236 கோரல்களில் 7.75 லட்சம் பங்குகள் விற்பனையாகிச் சாதனையைப் படைத்துள்ளது.

சண் தொலைக்காட்சி தற்போது தமிழ்நாடு, கேரளா, ஆந்திரப்பிரதேஷ் உட்பட பல மாநிலங்களில் பிரபல்யமாகியுள்ளன. அவற்றின் எப்.எம்.வானொலி அலைவரிசைகளும் இந்திய மக்களிடையே ஜனரஞ்சக மானவை. சண் பங்குகளில் 90 வீதத்தை மாறன் வைத்திருக்கிறார். 9080 லட்சம் வரை இவரது பங்குகள் தேறுகின்றன.

## இலங்கையில் கருச்சிதைவு எண்ணிக்கையில் அதிகரிப்பு



தற்போது இலங்கையில் கருச்சிதைவுகள் அன்றாடம் 800 முதல் 1000 வரை மேற்கொள்ளப்படுவதாக சுகாதாரத் திணைக்களப் புள்ளிவிபரமொன்று திடுக்கிடும் தகவலை வெளியிட்டுள்ளது. குழந்தைகள் நல சேவைகளின் ஆணையாளர் சரத் அபயகுணவர்த்தன இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், கருச்சிதைவு வீதம் அன்றாடம் கூடிவருவது குழந்தைகளின் உயிர்வாழ்வதற்கான அடிப்படை உரிமையைப் பாதிப்பதாகக் குறிப்பிட்டார்.

திருமணமான தம்பதியினரிடையே கருக்கலைப்ப அதிகம் இடம்பெறவதாகக் குறிப்பிட்ட அவர், பெரும்பாலானவர்கள் இலங்கையில் இன்னமும் இயற்கையான கருத்தடை முயற்சிகளிலேயெ நாட்டம் கொண்டுள்ளனரென்றும், கருத்தடைச் சாதனங்களின் பயன்பாட்டில் அக்கறை கொள்வதில்லை என்றும் தெரிவித்தார். பல தாய்மார் குழந்தைகளைப் பெற்றுவிட்டு அவற்றை வைத்தியசாலைகளிலேயே அனாதரவாகக் கைவிட்டு மாயமாக மறைந்துவிடுவதாகவும் மேலும் தெரிவித்தார். இத்தகைய சிசுக்கள் அரசின் குழந்தைகள் பராமரிப்பு நிலையங்களில்நிரம்பி வழிவதாகவும் அவர் குறிப்பிட்டார். கடந்த ஆண்டு இத்தகைய குழந்தைகள் பராமரிப்பு நிலையங்களின் செலவினங்களக்காக அரசு 5 மில்லியன் ரூபாவை ஒதுக்கியதாகவும் இவ்வாண்டு அது 10 மில்லியனாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். இலங்கையில் இன்று 1500 குழந்தைகள் வரை அநாதைகளாக அரச பாதுகாப்பில் உள்ளதாகக் குறிப்பிட்டார்.

நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

பெண்ணுறை என்பது பால்வினைத் தொழிலாளர்களுக் கானது மட்டுமல்ல சராசரி பெண்களுக்கும் உகந்ததென்ற அறிவைப் போதிக்கும் அறிமுக நிகழ்வுகளும் அவ்வப்போது இந்த தொண்டு நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் பெண்ணுறை சம்பந்தமான விவரண அறிவூட்டல் தமிழகத்தில் பரவலாக சமூக சேவை நிலையங்களிலும், பல்கலைக்கழக மட்டங்களிலும் மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. பெண்கள் பாலியல் சுதந்திரம் மற்றும் உடல் ஆரோக்கியத்திலும் இந்தப் பெண்ணுறை ஆக்கபூர்வமான பங்கினை வழங்கக்கூடுமென்றும், தமிழகத்தில் அதிகரித்துச்செல்லும் சட்டபூர்வமற்ற உயிராபத்தான கருக்கலைப்புகளுக்கும் இது ஒரு தடுப்பு நடவடிக்கையாக அமையலாம் என்றும் கருத்துக்கணிப்புகள் தெரிவிக்கின்றன.




### சிறி சபாரத்தினத்தின் 21வது வருட நினைவு தினம்

## மறைந்த தலைவரின் நினைவுகள்

21 ஆண்டுகளுக்கு முன் படுகொலை செய்யப்பட்ட தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் சிறி சபாரத்தினத்தின் 21வது ஆண்டு நினைவு தினத்தை லண்டனில் நினைவுகூர ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. இந்நிகழ்வு மே மாதத்தில் இடம்பெறவுள்ளது. 1987ல் நியூகாமில் இடம்பெற்ற நிகழ்வில் நடேசன் சத்தியேந்திரா இவ்வாறு நினைவு கூர்ந்திருந்தார். 'Truth does not require platforms and spotlights. It has its own power. We are not persons who suffer from some mental disease. We are not lovers of violence. We are honest fighters belonging to an organisation which is struggling to liberate a people'.

## அரச செலவில் கிரிக்கெட் போட்டிக்குச் செல்லமுயன்றவர்களுக்குத் தடை

இலங்கை அணியினருக்கு கிரிக்கெட் முதற் பிரிவில் கிடைத்த வெற்றியைத் தொடர்ந்து மேற்கிந்திய தீவுகளுக்கு கிரிக்கெற் போட்டியை அரசாங்கச் செலவில் காணச் செல்ல முயன்ற அரசாங்கப் பிரமுகர்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தடுத்து நிறுத்தியுள்ளார்.



இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் செய்திக்குறிப்பின்படி விளையாட்டுத்துறை அமைச்சர், அமைச்சின் செயலாளர் உட்பட பதினைந்து பேரும், கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிலிருந்து 5 போரும் சுமார் 20 பேர்வரையில் அரச செலவில் மேற்கிந்திய தீவுகளுக்குச் செல்லத் திட்டமிடப்பட்டிருந்தது. இதற்கான செலவாக 23 மில்லியன் ரூபாவும் அமைச்சரினால் ஒதுக்கப்பட்டிருந்தது. இதுபற்றி ஜனாதிபதிக்கு மேற்கொண்ட புகாரை அடுத்து முன்னாள் விளையாட்டத்துறை அமைச்சர் ஜீவன் குமாரதுங்க, தற்பொதைய விளையாட்டுத்துறை அமைச்சர் காமினி லொக்குகே, அமைச்சரவை அந்தஸ்து அற்ற விளையாட்டுத்துறை அமைச்சர் பந்துல பஸ்நாயக்க ஆகிய மூவருமே ஜனாதிபதியினால் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மூவருக்குமான செலவு 35 லட்சம் என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

### வடமராட்சி கடற்பரப்பில் மீனவர்களுக்குத் தடை

அதிகரித்துவரும் யுத்த நெருக்கடியின் காரணமாக வடமராட்சிக் கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு வடபகுதி மீனவர்களுக்கு மீண்டும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. வடமராட்சிக் கடற்பரப்பில் தாம் மேற்கொள்ளும் யுத்த ஒத்திகைகளின்போது இத்தடை அமுலுக்கு வரும் என்று படைத்துறை குறிப்பிட்டுள்ள போதிலும், பெரும்பாலான காலங்களில் முன்னரங்க இராணுவவீரர்கள் அவர்களை தடைசெய்துவருகின்றார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இதனால் வடமராட்சிப் பகுதி மீனவர்கள் பெரும் பொருளாதாரப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

Charles Kirit & Co Solicitors
24 Hour Police Station Assistance
Burrows House 415-417 High St Stratford
London E15 4QZ DX: 92230Stratford (London) I
Tel: 020 8221 0827 Fax: 020 8221 0828
Pager: 07659 107698 (24 hours)

Chris Raja Solicitors
Commercial - Domestic Conveyance
Immigration
Matrimonial Divorce, Childrens Applications
Grosvenor House, Third Floor, 1 High Street, Edgware, Middlesex HA8 7TA
Tel: 020 8952 1990 - 020 8952 8606
Fax: 020 8952 9606 Mobile: 07703 544 408
e-mail: CRSolicitors@hotmail.com

LINGA & CO
LEGAL ADVISERS AND COMMISSIONERS FOR OATHS
T. 020 8544 9285 F. 020 8542 9530
→ உங்களுக்கு பிரித்தானியாவில் வசிக்கும் அல்லது வேலைபார்க்கும் உரிமை மறுக்கப்பட்டுள்ளதா?
→ திருப்பி அனுப்பும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதா?
→ நீங்கள் பிரித்தானியாவில் தொடர்ந்து சட்டப்படி வசிக்க விரும்புகிறீர்களா?
→ அப்படியாயின் பல வழிகள் உண்டு
உடன் எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்.
12 ஆண்டுகால அனுபவமுள்ள முன்னணி குடிவரவுச் சட்ட நிறுவனத்திடம் இருந்து நிறுவனத்திடம் இருந்து உங்கள் குடிவரவுப் பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள். இதில் நாம் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்கள். மேலும் சமர்ப்பிக்கப்பட்ட பெரும் பாலான நுழைவு விண்ணப்பங்கள் - மேன் முறையீடுகள் உள்துறை அமைச்சினால் அங்கிகரிக்கப்பட்டுள்ளன.
We specialise in
Asylum and Immigration matters, Human Rights Application, Appeals, Detentionand Bail, Entry clearance application and appeal, Immigration, Judicial Review, Work Permits, EEA Application (Sponsor relative), Student visa, Highly Skilled Migration Program, Naturalisation Application,
46 High Street, Collieswood, London SW19, Emergency Line: 077 7164 6441

MARKANDAN & UDDIN SOLICITORS
- குடும்பத்தினருக்கான சலுகை அடிப்படையிலான விண்ணப்பங்கள்.
- விவாக விண்ணப்பங்கள்
- அகதி விண்ணப்பங்கள்
- 14 வருட 10 வருட அல்லது 7 வருட வதிவிட தகைமை விண்ணப்பங்கள்
- பிரித்தானிய பிரஜாவுரிமை
- வீதிப் போக்குவரத்து சம்பந்தமான வழக்குகள்.
- விபத்தில் அல்லது வேலை ஸ்தலத்தில் காயமடைந்திருந்தால் நட்ட ஈடு கோருவது சம்பந்தமான விடயங்கள் - No Win - No Fee அடிப்படையில்.
- பிரஜாவுரிமை விண்ணப்பத்திற்கான ஆங்கில மற்றும் வாழ்க்கை முறை தேர்ச்சி சம்பந்தமான ஆலோசனைகள்.

01,02,2005 முதல் அமுலுக்கு வந்துள்ள பிரித்தானியா அரசாங்கத்தின சட்டத்தின் பிரகாரம் இந் நாட்டில் திருமணம் புரியவிருப்பின் நீங்கள் பிரித்தானிய உள்துறை அமைச்சின் முன் அனுமதி (Home Office Clearance) பெற்றிருத்தல் வேண்டும். மேற்படி விண்ணப்பங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் எங்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.
TEL : 0208 514 8300/07830285634
THAMIL HOUSE, 720 Romford Road, London, E12 6BT

# தமிழ் பிரதிநிதிகளின் குழு வெளிநாட்டு அமைச்சரிடம் அதிருப்தி

லண்டன் வந்திருந்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லகமவை Tamil Fotum for Peace அமைப்பு சந்தித்து தமது அதிருப்தியை வெளியிட்டனர். அமைச்சரை இக்குழுவினர் அவர் தங்கியிருந்த ஹொட்டலில் மார்ச் 6ல் சந்தித்து இலங்கை நிலவரங்கள் தொடர்பாக தமது அதிருப்தியை வெளியிட்டனர்.

இவர்கள் மனித உரிமை மீறல்களை நிறுத்தும் படியும், இடம்பெயர்ந்த மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை உடன் வழங்கும் படியும், சர்வ்கட்சிக்குழுவின் அர்த்தமுள்ள தொடர்ச்சியாக அதிகாரப் பரவலாக்கம் மற்றும் அதிகாரப்பகிர்வு ஆகியவற்றை மேற்கொள்ளும் படியும் அமைச்சரைக் கேட்டுக் கொண்டனர்.

சர்வகட்சி குழுவுக்கு பெரும்பான்மை நிபுணர்கள் முன்வைத்த தீர்வுத் திட்டத்தை வரவேற்று உள்ள Tamil Fotum for Peace அரசு அதில் மாற்றங்களைக் கொண்டு வந்து அத்தீர்வை பலவீனப்படுத்தும் நடவடிக்கைகளைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொண்டனர்.

இலங்கை அரசின் சட்டவிரோத நடவடிக்கைகள் பற்றி Tamil Fotum for Peace தனது கடுமையான அதிருப்தியை வெளியிட்ட போதும் அமைச்சர் பொறுப்பான வகையில் பதிலளிக்காமல் தட்டிக்கழித்தார். இது இலங்கை அரசின் உதாசீனப் போக்கின் பரதிபலிப்பாகவே இருந்தது.



அதிருப்தியை கணக்கெடுத்துக் கொள்ளாத இலங்கை வெளிநாட்டு அமைச்சர் அமைச்சர் றோகித போலகம

## இலங்கையில் பதற்றநிலை: பிரிட்டனின் கவலை

இலங்கையில் அண்மைக்காலங்களில் ஏற்படுத்தப் பட்டு வரும் மனித அவலங்களையிட்டு பிரிட்டன் கவலை தெரிவித்துள்ளது. மார்ச் 5ம் திகதி நிகழ்ந்த இலங்கை வெளியுறவு அமைச்சர் ரோஹித்த போகொல்லகமவுடனான சந்திப்பின்போது பிரித்தானிய வெளியுறவுச் செயலர் மார்கிரெட் பெக்கெட் கவலையும் கண்டனமும் தெரிவித்திருந்தார். "இலங்கையின் அதிகரித்துவரும் வன்முறைக்கு மக்கள் அதிக விலைகொடுக்கவேண்டிய நிலையில் உள்ளனர். இராணுவ முன்னெடுப்பு இலங்கையின் இனப்பிரச்சினைக்கு எவ்வித தீர்வையும் கொண்டுவரப் போவதில்லை" என்று அவர் தெரிவித்திருந்தார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வை சமாதானப் பேச்சக்களின்மூலம் முன்னெடுப்பதற்கு பிரிட்டன் என்றும் ஆதரவாக இருப்பதாகத் தெரிவித்தார்.




# மலேசியத் தமிழர்களின் தூள் கிளப்பும் தீர்மானங்கள்

அண்மையில் சிறிலங்காவில் மனித குலத்திற்கு எதிரான குற்றச்செயல்கள் என்னும் தலைப்பில் ஒரு கண்டனக் கூட்டம் மலேசியாவின், ஈப்போ சமூக நற்பணி இயக்கத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் சுமார் 300 பேர் வரை கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வில் ஈப்போ பாராட் நாடாளுமன்ற உறுப்பினர் மு.குலசேகரன், ஜனநாயக செயல்கட்சியின் தலைமைச் செயலாளர் லிம் குவான் இங், மலேசியத் தமிழ் நெறிக் கழகத் தலைவர் திருமாவளவன், மனித உரிமைக் கழகத்தைச் சார்ந்த பான் யூ தெங், வழக்கறிஞர் சி.பசுபதி, முனைவர் தமிழ்க்குயில் கா.கலியபெருமாள் ஆகியோர் உரையாற்றினர்.

இந்நிகழ்வின் இறுதியில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன:

1. இலங்கைக்கு உதவி வழங்கும் அனைத்துலக நாடுகளின் பங்காற்றலுக்கு மாற்றாக ஐக்கிய நாடுகளின் சபை இப்பிரச்சினையில் நேரிடையாகத் தலையிட வேண்டும்.
2. ஐக்கிய நாடுகள் சபை சிறிலங்காவை ஒரு செயலாக்கம் இழந்த நாடாக Failed State அறிவித்து, தமிழ் ஈழத்தைத் தனிநாடாக இசைவளிக்க வேண்டும்.
3. ஸ்ரீலங்காவின் தமிழினப் படுகொலைக்கு ஆதரவளிக்கும் புஷ் நிர்வாகத்தை கண்டித்தல் வேண்டும்
4. இந்திய அரசு சிறிலங்காவின் இனப்பிரச்சினையைக் களைவதில் ஒடுக்கப்பட்ட ஈழத்தமிழர்களின் வரலாற்றை நன்குணர்ந்த தமிழ் அமைச்சர் ஒருவரை ஆலோசனைக் குழுவில் நியமிக்கவேண்டும்.
5. சிறிலங்காவில் அதிகரித்துவரும் மனித உயிர் இழப்புகளைத் தவிர்க்கும் வகையில் அனைத்துலகுச் சமூகம் உடனடியாக உணவு, மருந்து மற்றும் உதவிகளை வழங்குவததுடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நடுநிலையான இராணுவப் பாதுகாப்பு வழங்க வேண்டும்.
6. மலேசிய ஆங்கில, மலாய், சீன ஊடகங்கள் ஈழப்போராட்டம் தொடர்பான செய்திகளை வெளியிடும்போது தமிழ் மக்களின் உணர்வுகளையும் கருத்திற்கொள்ள வேண்டும்.
7. சிறிலங்கா அதிபர் மஹிந்த ராஜபக்ஷ போர்க்குற்றவாளியாக அனைத்துலக நீதிமன்றத்தில் விசாரணைக்குட்படுத்தப்படவேண்டும்.

## இலங்கை அமெரிக்காவுடன் இராணுவ உதவிகளுக்கான ஒப்பந்தம்



மார்ச் 5ம் திகதி இலங்கை அரசு அமெரிக்காவுடன் 10 ஆண்டுகளுக்கான இராணுவ ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டுள்ளது. இதற்கான ஒப்பந்தத்தில் இலங்கை இராணுவ செயலாளர் கோதபய ராஜபக்ஷவும் அமெரிக்க தூதர் ரொபர்ட் பிளேக்கும் (படம்) கைச்சாத்திட்டு உள்ளனர். இயற்கை அழிவுகளின்போதும், அவசர இராணுவ உதவிகளின் தேவைகளின்போதும் இந்த ஒப்பந்தத்தின்படி அமெரிக்க இராணுவம் தனது காலை இலங்கை மண்ணில் பதிக்க வாய்ப்பினை இவ்வொப்பந்தம் வழங்கும். அமைதிகாக்கும் பணிகளும் இதில் அடங்கும்.

மார்ச் 2002இல் முன்னர் கைச்சாத்திட எத்தனிக்கப்பட்ட இவ்வொப்பந்தம் ஐந்தாண்டுக்கால தாமதத்தின் பின்னர் மார்ச் 5ம் திகதி கைச்சாத்திடப்பட்டுள்ளது. அமெரிக்கா இத்தகைய ஒப்பந்தத்தை மேலும் 89 நாடுகளுடன் மேற்கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# புலம்பெயர்ந்த - எழுத்தாளர்கள் - ஊடகவியலாளர்கள் - கலைஞர்கள் நூல்விபரத்த திரட்டு



இலங்கை எழுத்தாளர் கலாபூஷணம் பீ.எம்.புன்னியாமீன் அவர்களின் நூறாவது நூல் வெளியீட்டு விழா கடந்த 17.3.2007 அன்று டுயிஸ்பேர்க் International Zentrum மண்டபத்தில் இடம்பெற்றது. பிரதம விருந்தினராக லண்டனிலிருந்து நூலகவியலாளர் என்.செல்வராஜா இந்நிகழ்வில் கலந்துகொண்டார்.

பீ.எம்.புன்னியாமீன் அவர்கள் எழுதி வெளியிட்ட இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் கலைஞர்களின் விபரத்திரட்டின் நான்காம் தொகுதி அவரது நூறாவது வெளியீடாகும். இத்தொகுதி சிறப்பாக புலம்பெயர்ந்த ஈழத்து எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் கலைஞர்களின் விபரத்திரட்டின் முதலாம் பாகமாக அமைகின்றது. இத்தொகுதியில் லண்டனிலிருந்து என். செல்வராஜா, நவஜோதி ஜோகரட்ணம், இளவாலை அமுது, கொன்ஸ்டன்டைன், முல்லை அமுதன், ரமேஷ் வேதநாயகம் ஆகியோர் பதிவு செய்யப்பட்டு உள்ளனர்.

திருக்கோணமலையில் இலக்கிய வெளியீட்டின் முன்னோடி புலவர் வே. அகிலேசபிள்ளை என்ற நூல் கலாவிநோதன் த.சித்தி அமரசிங்கம் அவர்களால் திருக்கோணமலை ஈழத்து இலக்கியச்சோலை வெளியீடாக மார்ச் 2006இல் வெளிவந்துள்ளது. தமிழறிஞரான புலவர் வே.அகிலேசபிள்ளை அவர்களின் 152ஆவது நினைவாண்டில் இந்நூல் வெளிவந்திருப்பது சிறப்பம்சமாகும்.

இதுவரை இப்பெரியார் பற்றி ஈழத்தில் வேறெந்த நூலும் வெளிவரவில்லை. இந்நூலை வெளியிட்டு .ருக்கும் திரு சித்தி அமரசிங்கம் அவர்கள் திருக்கோணமலையின் மண்பற்றாளர். வாழ்ந்து மறைந்த அந்த மண்ணின் மனிதர்களைப்பற்றித் தமிழ் உலகம் அறியச் செய்யும் பணியில் விடாப்பிடியாக உழைத்து வருபவர்.

எழுத்தாளர், வெளியீட்டாளர், நாடக நடிகர், ஆய்வாளர், அரிய நூல்சேகரிப்பாளர், என்று பல முகங்களைக் கொண்டவர் சித்தி அமரசிங்கம் அவர்கள். திருக்கோணமலை மாவட்டத்தைச் சல்லடைபோட்டுத் தேடி மறைந்துபோன பல பெரியார்கள் பற்றிய குறிப்புக்களைத் தேடி எடுத்து அவை அனைத்தையும் ஆவணப்பதிவாக்கி வைப்பதில் மிகுந்த ஈடுபாட்டுடன் உழைப்பவர்.

ஈழத்து இலக்கியச்சோலையின் எட்டாவது வெளியீடாக கழகப் புலவர் பெ.பொ.சி.கவிதைகள் என்ற நூல் வெளிவந்தது. திருக்கோணமலை தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராகவும் இராமகிருஷ ்ண சங்க இந்துக்கல்லூரியின் ஆசிரியராகவும் பணியாற்றி 1983இல் அமரரான கழகப் புலவர் வரகவி பெ.பொ.சிவசேகரனார் அவர்களின் கவிதைகளின் தொகுப்பாக அமைந்த இந்நூலை, ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி இராசநாயகி கந்தையா அவர்களால் எழுதப்பட்ட அமரர் பெ.பொ.சி. அவர்களின் வாழ்க்கை வரலாற்றுடன் சேர்த்து சித்தி அமரசிங்கம் அவர்கள் வெளியிட்டிருந்தார்.

திறனாய்வாளர் திருக்கோணமலை த.கனகசுந்தரம் பிள்ளை, என்ற நூல் ஈழத்து இலக்கியச் சோலையின் 16ஆவது வெளியீடாக வெளிவந்தது. தி. த. கனகசுந்தரம் பிள்ளை அவர்கள் மறைந்த 142அவது ஆண்டில் அப்பெரியார் பற்றி அவ்வப்போது ஒன்பது அறிஞர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து 2003இல் இந்நூல் வெளிவந்தது.

தம்பலகாமம் க.வேலாயுதம் என்ற நூல், திருக்கோணமலை மண்ணில் வாழ்ந்துகொண்டிருக்கும் தம்பலகாமத்தின் மூதறிஞரான க.வேலாயுதம் என்பவரை தமிழ் உலகம் அறிய வழிசெய்திருந்தது. பல்கலை வேந்தன், கழம்பெரும் பரியாரி, முதபெரும் ஊடகவியலாளன், சமூகத்தொண்டன் என்றெல்லாம் விழிக்கபெற்ற தம்பலகாமம் க.வேலாயுதம் அவர்களின் முதமைக்காலத்தில் அவரது பணிகளை நினைவுகூர்ந்து, வாழும்போது கௌரவிக்கும் வகையில் தம்பலகாமம் க.வேலாயுதம் அவர்களின் 87ஆவது அகவையின்போது 2005இல் அவர்பற்றிய நூலை ஈழத்து இலக்கியச்சோலை வெளியிட்டிருந்தது.

இந்த நூல்கள் தவிர, காந்திமாஸ்டர் சிறப்புமலர், கிழக்கில் பூத்த ஞானமலர் போன்ற சிறப்புமலர்களையும் வெளியிட்டு அந்த மண்ணின் மைந்தர்களை கௌரவித்து வந்தவர் ஈழத்து இலக்கியச்சோலையின் சித்தி அமரசிங்கம் அவர்கள். அவரது அண்மைக்கால அறுவடையாக திருக்கோணமலையில் இலக்கிய வெளியீட்டின் முன்னோடி புலவர் வே.அகிலேசபிள்ளை என்ற வாழ்க்கை வரலாற்றுநூல் அமைந்திருக்கின்றது.

ஈழத்து இலக்கியச் சோலை இவ்வாறான நூல்களை இலங்கையில் அச்சிட்டு விநியோகிக்க உத்தேசமாக 300 ஸ்டேர்லிங் பவுண் வரையில் செலவாகும். இத்தொகை இங்கிருந்து சமூகநோக்கம் கொண்ட ஓரிருவர் அனுப்பி வைக்க முடிந்தால் இந்தப்பணியை அவர்கள் வெகு இலகவாகச் செய்து முடிப்பார்கள். இதில் ஆர்வம் கொண்டவர்கள் என்னுடன் நேரில் தொடர்புகொண்டால் உங்களுக்கு அர்களுடனான தொடர்பினை ஏற்படுத்தித் தரமுடியும். தாயகததின் இலக்கிய வளர்ச்சிக்கு நாம் வழங்கும் ஆக்கபூர்வமான உதவிகள் எமது படைப்புக்களையும், படைப்பாளிகளின் வரலாறுகளையும் அழிவிலிருந்து பாதுகாக்க நிச்சயம் உதவும்.



புலம் பெயர் எழுத்தாளர்கள் - ஊடகவியலாளர்கள் - கலைஞர்கள் தங்கள் விபரங்களை உதயனுக்கு அனுப்பி வைக்கும் பட்சத்தில் அடுத்த நூல்விபரத்திரட்டில் அவற்றை சேர்த்துக் கொள்ளக் கூடியதாய் இருக்கும்.

MARKANDAN & CO SOLICITORS

Are you burden with debts? We can negotiate with your lender and reduce the totaldebt and or write off your interest in total!!.
No wi no fee
Have you redeemed your mortgage early and the lender has charged you excessive penalty. According latest FSA decision the penalty must be fair.
If you feel that you have been charged an excessive fee by your lender we will deal with your claim. NO WIN NO FEE basis.
Are you a victim of recent contaminated petrol issued by supermarket forecourts. We will get you compensation on no win no fee basis.

020 8514 8188
845 Romford Rd, Manor Park, London E12

AMEN SOLICITORS
SOLICITOR AND COMMISSIONERS FOR OATHS
(formerly known as Nathan & Linga)

We offer a specialised and friendly service in the following areas of law
* Immigration and Nationality
* Human Rights
* Judicial Review
* Civil Litigation
* Criminal Litigation
* Injunction
* Traffic Offences
* Conveyancing (Residential & Commercial)
* Family Law
* Employment Law
* Mental Health
* Liquor licensing
* Landlord and Tanent

Also, we offer our quality legal service inthe following languages
* Creole * English * Italian * Malay * Nepalese * Sinhalese * Tamil
* Chinese * French * Hindi * Mandarin * Funjabi * Spanish * Urdu

4 Amen Corner, Tooting, London SW17 9JE
General Line: 0208 682 7720
Emergency Line: 0777 164 6441
Fax: 0208 767 1412

chess™ financial services
Award Winning Adviser
Top 100 in the UK
By Appointment Only
Bob Singh. CeMap, DipPFS, Managing Director
Uxbridge House, 2nd Floor, 460-464
Uxbridge Road,Hayes, Middlesex, UB4 0SD
Tel: 0208 573 7272 • Fax: 0208 573 7125

JAY VADHER&CO
SOLICITORS
AND NOTARY PUBLIC
Jay Vadher and Rajay Vadher
Partners
Asst. Solicitor - Ruby Moreea
Notary Public - Roger Hart
We specialise in commercial & residential property conveyancing, wills,probate and family law.
For asistance please contact us at
Victoria House, 185 Romford Road, Stratford, London E15 4JF
Tel: 020 8519 3000 DX 52106 Forest Gate Fax: 020 8519 3300
E-mail: j.vadher@jayvadher.co.uk E-mail:r.vadher@jayvadher.co.uk

PINIDIYA SOLICITORS LLP
Specialist in........
- Immigration Law
- Work Permits
- Business Visa
- Appeals & Entry Visa
- Housing Law
- Family Law
- Landlord & Tenant
- Conveyancing
- Wills / Probate
- Legal Aid Available On Immigration
- Free Initial Consultation
pinidiyasolicitors@fsmail.net | Emergency: 079 61199557
Tel: 020 8571 3535 Fax: 020 8574 2525
83A, South Road, Southall, Middx UB1 1SQ

லண்டன் தமிழர்களின் தரம் மிக்க பத்திரிகை உதயன்

GARCHA&CO
Chartered Certified Accountants
For your accounting and Taxation needs, CALL:
Heasleigh House 79a South Road, Southall, Middlesex UB1 1SQ
Tel: 020 8843 1816 020 8843 9010
Fax: 020 8813 8249

020 8952 5677

JANI TAYLOR ASSOCIATES
- Expert Witness
- Forensic Accounting
- Litigation Support
- Tax Investigations
Office 6A, Popin Business Centre
Southway, Wembley, Middlesex HA9 0HF
T: 020 8795 3429 F: 020 8795 3318
rajni@janitaylor.co.uk


David Shine & Kharhanda Solicitors
Divorce, Litigation, Wills Probate, CONVEYANCING
MATRIMONIAL & FAMILY
Also Landlord & Tenant Cases
See us Now
020 8571 6001 / 2
Southall

MR K CHELVA-NAYAGAM LLB
SOLICITOR
(Former principal of Natham & Chelva)
Has now joined as a solicitor with Srinivasans Solicitors at 169 Tooting High Street London SW17 OSY
Tel: 020 8767 1151 Fax: 020 87671388
Contact him for all your legal matters in particular Commercial&Residential Conveyances, Family Proceedings, Civil Litigation & Immigration. He always works for clients' interest & takes more xcare in dealing with his clients' matters.

NP solicitors
- Immigration matters
- Work permits, HSMP, SBS
- All entry clearance issues
- Appeals, ECO to High Court etc
- All Home Office applications
- 10 Asian languages spoken
Commissioners For Oaths
171 Hanworth Road, Hounslow, Middlesex TW3 3TT - UK
Tel: 020 8577 7799 Fax: 020 8577 9788
e-mail: npsolicitors@yahoo.co.uk
www.npsolicitors.com
Saturdays by Appointment
THIS FIRM IS REGULATED BY THE LAW SOCIETY

# மூதூர் மக்கள் வெளியேற்றப்பட்டது பற்றி பாரிஸில் கலந்துரையாடல்

மூன்றாவது மனிதன் சஞ்சிகையின் ஆசிரியர் எம் பௌசர் (படம்) உடனான சந்திப்பு 18.02.2007ல் பிரான்சின் நண்பர்கள் வட்டத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டது. இச்சந்திப்பில் மூதூரில் இருந்து விரட்டப்பட்ட முஸ்லீம்களின் துயரக் காட்சிகள் அடங்கிய வீடியோ தொகுப்பை அனைவரின் பார்வைக்கு உட்படுத்தியதோடு மூதூர் வெளியேற்றம் எனும் தலைப்பைக் கொண்ட சிறு நூலும் உதயகுமாரின் அறிமுகத்தோடு வெளியிடப் பட்டது.



இதன் பின்பு அனைவருட னான கலந்துரையாடல் நிகழ்ந்தது. இதில் புகழிடத்தில் ஜனநாயக செயல்பாடுகளின் முக்கியத்துவமும் ஜனநாயக மறுப்பையும் படுகொலைகளையும் எத்தரப்பினராயினும் மேற்கொள்ளும் பட்சத்தில் அதை அம்பலப்படுத்துவதும் அதற்கெதிரான கண்டனங்களைத் தெரிவிக்க நாம் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் எனும் கருத்தை தோழர் அசோக் முன்வைத்ததோடு புகழிடத்தில் எமது அரசியல் நடவடிக்கைகள் எவ்வகையில் அமைந்திருக்க வேண்டும் என நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள் எனும் கேள்வியையும் பௌசரிடம் முன்வைத்தார்.



ஸ்ரீலங்கா அரசின் நிலைப்பாட்டையும் புலிகளின் நிலைப்பாட்டையும் அம்பலப்படுத்துவதில் நாம் ஒருங்கிணைந்த ஒரு செயல்பாட்டை சர்வதேச மட்டத்தில் மேற்கொள்ள வேண்டும் என்பதோடு எமக்குள் நாம் பலவகையான கருத்து வேறுபாடுகளுடனும் பன்மைத்துவங்களை பேணி வாழ்கின்ற போதும் மேற்படி எமது அரசியல் சூழலை மனதில் கொண்டு எமக்குள் ஓர் ஒருங்கிணைவின் அவசியம் உணரப்பட வேண்டும். இதுவே புகழிடத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கிய பணியாக இருக்கும் என தான் நம்புவதாக பௌசர் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து புகழிடத்தில் ஜனநாயகச் சூழலை உருவாக்குவதற்கு ரி.பி.சி வானொலியும், தேனீ இணையத்தளமும் ஆற்றிய பங்கு பற்றியும் பேசப்பட்டது. அவைகள் கூட ஜனநாயக மறுப்பைக் கொண்டவைகளாக பல தருணங்களில் செயல்படுகிறார்கள் என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டது. மேலும் மக்களின் நலன்களிலிருந்தே எதுவும் நிகழ வேண்டும் எனவும் கருத்துக் கூறப்பட்டது. மேற்படி கலந்துரையாடல்களில் தேவதாசன், மனோ (அம்மா), இரயாகரன் (சமர்), அசுரா, விஜி, மோகன் லக்ஷ்மி ஆகியோருடன் இன்னும் பலரும் கலந்து கொண்டனர். மூதூரில் இருந்து புலிகளால் விரட்டியடிக்கப்பட்ட முஸ்லீம் மக்களின் துயரங்களில் பங்கு கொண்ட முஸ்லீம் பிரஜை ஒருவரின் வாக்குமூலமும் தான் நேரில் அனுபவித்த துயரங்களையும் தன்னுடன் மூதூர் முஸ்லீம் சமூகமும் பட்ட மரணத்தின் எல்லை களையும் விபரிக்கின்ற நூல் தான் "மூதூர் வெளியேற்றம்' இந் நூல் துயரங்களை ஆவணமாக்கும் செயலரங்கம் எனும் புகழிட ஒன்றியத்தினால் வளியிடப்பட்டு உள்ளது.




# அவுஸ்திரேலியாவில் வருடாந்த தமிழ் எழுத்தாளர் சந்திப்பு

அறிந்ததைப் பகிர்தல், அறியாததை அறிந்து கொள்ள முயலுதல் என்ற அடிப்படை நோக்குடன் கலையும் இலக்கியமும் இனத்தின் கண்கள் என்ற தாரக மந்திரத்துடன் இயங்கும் ஈழத் தமிழ் எழுத்தாளர் சங்கம் ஒன்று அவுஸ்திரேலியாவில் இயங்கிவருகின்றது. அவுஸ்திரேலியாவில் இன்று புலம்பெயர்ந்து வாழும் ஈழத்து எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், படைப்பிலக்கியவாதிகள் அனைவரும் தத்தம் கொள்கைகள், வேறுபட்ட கருத்தியல்கள் என்பனவற்றிற்கு அப்பால், வருடாந்தம் இந்த தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் அனுசரணையுடன் நடைபெறும் தமிழ் எழுத்தாளர் விழாவில் ஒன்று சேர்கிறார்கள். ஆரோக்கியமான கருத்துப் பரிமாற்றத்தில் ஈடுபடுகிறார்கள். பல்வேறு அரசியல், எழுத்தியல் வேறுபாடுகளால் பாதிக்கப்பட்டு திக்கெட்டும் பிரிந்து இயங்கிவரும் ஐரோப்பிய படைப்பிலக்கியவாதிகளைச் சிந்திக்கத்தூண்டும் வகையில் இந்நிகழ்வு அமைந்துள்ளது.

இவ்வாண்டு இடம்பெற்ற அவுஸ்திரேலிய தமிழ் எழுத்தாளர் விழா, ஏழாவது ஆண்டு நிகழ்ச்சியாகும். இது மெல்பேர்ண் நகரில் Prescom நகர மண்டபத்தில் ஜனவரி 27ம் திகதி சனிக்கிழமை (27.1.2007) முழுநாள் நிகழ்வாக நடைபெற்றது. கருத்தரங்கு, விமர்சன அரங்கு, கவிதைச் சமர், கவியரங்கு, கலையரங்கு, நூல் வெளியீடு, படைப்பாளிகளின் பவளவிழா பாராட்டு வைபவம் என்று விரிவான நிகழ்ச்சிகளுடன் எழுத்தாளர் விழா 2007 இடம்பெற்றுள்ளது.

அவுஸ்திரேலியா தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் தலைவர் எழுத்தாளர் லெ.முருகபூபதியின் தலைமையில் இடம்பெற்ற காலை நிகழ்ச்சிகளையடுத்து மூன்று அமர்வுகளில் கருத்தரங்குகள் இடம்பெற்றன. சிறுகதை இலக்கிய வளர்ச்சிப் போக்கு எழுத்தாளர் வாசகர் உறவும் இலக்கியச் சந்திப்புகளின் பலாபலன்களும், புலம்பெயர் நாடுகளில் சிறுவர் நாடகம், தமிழரின் உணவு நாகரீகம் முதலான தலைப்புகளில் மூன்று அமர்வுகளில் கருத்தரங்குகள் நடைபெற்றன.

முதலாவது அமர்வு தெ.நித்தியகீர்த்தியின் தலைமையில் இடம்பெற்றது. அதில் எழுத்தாளர் எஸ். பொன்னுத்துரை தமிழில் சிறுகதை தோற்றம், வளர்ச்சி, மாற்றம் என்ற தலைப்பிலும், திருமதி பாமதி பிரதீப், கலாநிதி சந்திரலேகா வாமதேவா ஆகியோர் எழுத்தாளர் விழாக்களின் சமூகப் பங்களிப்பு என்ற தலைப்பிலும் தமது கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டனர்.

இரண்டாவது கருத்தரங்க அமர்வு, கலாநிதி வேலுப்பிள்ளை கருணாகரன் தலைமையில் இடம்பெற்றது. இதில் நித்தி கனகரத்தினம் அவர்கள் தமிழர் உணவு நாகரீகம் என்ற தலைப்பில் உரையாற்றினார்.

மூன்றாவது அமர்வில், மாவை நித்தியானந்தன் தலைமையில் அ.சந்திரகாசன் அவர்கள் தமிழர் புலம்பெயர்ந்த நாடுகளில் சிறுவர் நாடகம் என்ற தலைப்பில் தனது கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டார்.

பிற்பகல் இடம்பெற்ற நூல் விமர்சன அரங்கில் சிறுகதை, சிறுவர் இலக்கியம், நாடகம், கவிதை, விமர்சனம், சஞ்சிகை முதலான துறைகளில் வெளியான புதிய வெளியீடுகள் விமர்சிக்கப்பட்டன. ஆழியாளின் துவிதம் கவிதைத் தொகுப்பு, எஸ்.பொ., அ.சந்திரகாசன் ஆகியோர் இணைந்தெழுதிய ஈடு நாடகம், லெ.முருகபூபதியின் நினைவுக்கோலங்கள் உஷா ஜவகர் எழுதிய அம்மா என்றொரு சொந்தம், சிறைப்பட்டிருத்தல் என்ற ஞானம் சிறுகதைத் தொகுப்பு, ஆகிய சிறுகதை இலக்கிய நூல்களும், அம்பிகைபாகனின் கொஞ்சும் தமிழ் சிறுவர் இலக்கிய நூல், எஸ்.பொ.வின் பனிக்குள் நெருப்பு என்ற விமர்சன நூல், மற்றும் லதாவின் மொழிபெயர்க்கப்பட்ட மௌனம் என்ற தேர்ந்த நேர்காணல், மற்றும் ஞானம் கலை இலக்கிய சஞ்சிகை ஆகிய நூல்கள் திறனாய்வு செய்யப்பட்டன. விமர்சன அரங்கின் இறுதியில் படைப்பாளிகளின் பதிலுரைகளும் சுருக்கமாக இடம்பெற்றன.

கவிதைச் சமர் நிகழ்வில் ஆணாதிக்கமா அதற்காய் பெண்ணாதிக்கமா? பெண்ணடிமைத்தனமா அதனால் ஆணாதிக்கமா என்ற கேள்விகளை முன்வைத்து வித்தியாசமான கவிதைச் சமர் இடம்பெற்றது. திருமதி மனோ ஜெகேந்திரன், திருமதி சௌந்தரி சிவானந்தன் ஆகியோர் இக்கவிதைச் சமரில் இறங்கியிருந்தனர்.

மாலை நிகழ்ச்சிகளில் திருமதி ரேணுகா தனஸ்கந்தாவின் வரவேற்புரையைத் தொடர்ந்து, கண் திறந்திட வேண்டும் என்ற தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றது. பாடும்மீன் சு.ஸ்ரீகந்தராசாவின் தலைமை யில் இடம்பெற்ற கவியரங்கத்தில் சிட்னி மெல்பர்ன் வாழ் கவிஞர்கள் பலர் ஆர்வத்துடன் பங்கு பற்றினர்.

அண்ணாவியார் இளைய பத்மநாதனின் நெறியாழ்கையில் சிட்னி நாடகப் பள்ளி தயாரித்து வழங்கிய யாழ்பாடி நாட்டுக்கூத்து விசேட நிகழ்ச்சியாக இந்த எழுத்தாளர் விழாவில் இடம்பெற்றது.

இவ்விலக்கிய விழாவில் நீண்டகாலம் இலக்கியப் பணியாற்றிய மூன்று ஈழத்துப் படைப்பாளிகள் கௌரவிக்கப்பட்டார்கள். கலைவளன் சிசு நாகேந்திரன், காவலூர் இராசதுரை, எஸ்.பொன்னுத்துரை ஆகிய மூவருமே இலக்கிய விழாவில் கௌரவம் பெற்றவர்களாவர்.



லண்டன் பாரதிய வித்ய பவனில் கடந்த 25 வருட காலமாக இசை, வீணை ஆசிரியையாகக் கடமை புரிந்துகொண்டிருக்கும் திருமதி சிவசக்தி சிவநேசனுடன், லண்டன் Westminister பல்கலைக்கழகத்தினால் உறுதிப் படுத்தப்பட்ட, லண்டன் Trinity College of Music, லண்டன் பாரதிய வித்ய பவன் ஆகியன இணைந்து நடாத்தும் இந்திய இசையின் பட்டப்படிப்பைப் பற்றிய கலந்துரையாடல்.

# சிவசக்தி சிவனேசனுடன் சந்திப்பு

*நவஜோதி: நீங்கள் பாரதிய வித்ய பவனில் நீண்ட காலமாகப் ஆசிரியையாகப் பணியாற்றுகிறீர்கள். இந்த பட்டப்படிப்பின் பின்னணி பற்றி எமக்கு விபரமாகக் கூற முடியுமா?*

சிவசக்தி: இந்தப் பட்டப்படிப்பானது இந்திய இசையில் BMus(Hons)பட்டத்தை வழங்க Trinity College of Music உம் லண்டன் பாரதீய வித்யா பவன் கிளையும் சேர்ந்து தயாரிக்கப்பட்டதாகும், இந்தப் பட்டப்படிப்பானது கர்நாடக சங்கீதத்தினதும், மேல்நாட்டு இசையினதும், ஹிந்துஸ்தானி சங்கீதத்தினதும் அதாவது வட இந்திய தென்இந்திய இசையின் தனித்துவமான சிறப்பை மிக உன்னதமான உயர்ந்த தரத்தில் படிக்க வாய்ப்பை அளிக்கின்றது. ஐரோப்பாவில் இந்த ஒரு பட்டப்படிப்பு மட்டுமே பாரம்பரியம் மிக்க இந்திய சங்கீதங்கள் இரண்டையும் ஒன்று சேர்த்து இன்றைய சூழ்நிலையில், சமூக சேவைக்கு மிகவும் பொருந்தக்கூடியதாக அமைந்துள்ளதாக நான் நினைக்கிறேன்.

*நவஜோதி: இந்த பட்டப்படிப்பை எந்தப் பல்கலைக் கழகம் உறுதிப்படுத்தியுள்ளது? இதில் லண்டன் Trinity College of Music இன் பங்களிப்பு என்ன?*

சிவசக்தி: இந்தப் பட்டப்படிப்பு லண்டன் Westminster பல்கலைக்கழகத்தால் உறுதி செய்யப்பட்டது. உலக இசையில் தனித்துவமான கலைத்திறனை பாதுகாப்போரில் முதல் தரமாக மதிக்கப்படும் Trinity College இன் முக்கிய பங்காகவே இந்தப் பட்டப்படிப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தப் பட்டப் படிப்பின் தரத்திற்குப் பொறுப்பானவர்கள் Trinity Music College காரர்களே! அதனை கற்றுக் கொடுப்பதே பாரதீய வித்யாபவனின் முக்கிய பொறுப்பாகும்.

*நவஜோதி: இந்தப் பட்டப் படிப்பிற்கு யார் யார் விண்ணப்பிக்க முடியும்?*

சிவசக்தி: யாராக இருந்தாலும் ஹிந்துஸ்தானி சங்கீதத்தை அல்லது கர்நாடக சங்கீதத்தை மேலைத்தேச சங்கீதத்தை பாடக்கூடிய அல்லது வாத்திய கருவிகளில் வாசிக்கக்கூடியவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

கட்டாயமாக சாஸ்திரீய சங்கீதம் தெரிந்தவராக இருக்க வேண்டும். ஆனால் அதன் தன்மையை இயற்கையாகவே வெளிப்படுத்த தெரிந்தவர்களுக்கும் இது பொருந்தும்.

*நவஜோதி: பகுதி நேர பட்டப்படிப்பாக இதனைப் படிக்க இயலுமா?*

சிவசக்தி: பகுதிநேரப் பட்டப் படிப்பாக இதனைப் படிக்க முடியாது. இது ஒரு முழுநேரப் பட்டப்படிப்பாகும்.

*நவஜோதி: இந்தப் படிப்பின்போது கால வரையறை எத்தனை வருடம் எடுக்கும்?*

சிவசக்தி: இந்தப் பட்டப்படிப்பை படித்து முடிக்க நான்கு வருடங்கள் ஆகும்.

நவஜோதி : இந்தப் பட்டப் படிப்பிற்கான கட்டணங்கள் பண விபரங்கள் பற்றி சொல்லமுடியுமா?

சிவசக்தி : லண்டன் பல்கலைக்கழகங்களில் படிக்க எவ்வளவு செலவாகுமோ அதுவே இந்தப் படிப்பிற்கும் செலவாகும். லண்டன் மாணவர்களுக்கு வருடத்துக்கு 3,000 பவுண்கள் செலவாகும். ஐரோப்பிய மாணவர்கள தவிர்ந்த வெளிநாட்டு மாணவர்களுக்கு வருடத்துக்கு 12,000 பவுண்கள் தேவைப்படும்.

*நவஜோதி: லண்டனில் இருக்கும் மாணவர்களிடம் என்ன தராதரம் அதாவது தகுதிகளை எதிர்பார்க்கின்றார்கள்?*

சிவசக்தி: ஆங்கிலத்துடன் சேர்த்து 3 GCSE O/L பாடங்கள் குறைந்தது 'C' தரத்திலாவது சித்தியடைந்து இருக்க வேண்டும். அத்துடன் 2 A/L சித்தியடைந்திருக்க வேண்டும். அல்லது 8th Grade Theory உம் 8th Grade Practical இசைத்துறையில் எடுத்திருக்கவேண்டும். Assiciated Board Trinity Guild Hall பரீட்சையில் GCE A/L இசையில் சித்தியடைந்திருக்க வேண்டும். அத்துடன் வேறு இந்திய சங்கீத சபையினரால் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்தி அடைந்து இருந்தாலும் அவையும் தனிப்பட்ட முறையில் கணிக்கப்படும்.

*நவஜோதி: பட்டப்படிப்பு மேற்கொள்ள விரும்பும் மாணவர்களுக்கு ஆங்கில அறிவு எவ்வளவு இருக்க வேண்டும்?*

சிவசக்தி: இப்பட்டப்படிப்பை தேர்வு செய்பவர்கள் ஆங்கிலத்தை தமது முதல் மொழியாகப் படிக்காதவர்கள் ஆங்கிலத்தில் கீழ்வரும் தகுதிகளில் ஒன்றினைப் பெற்றிருக்க வேண்டும்.

1. அனைத்துலக ஆங்கில மொழி ஆசிரிய பாடத்திட்டத்தில் 6 தகுதிகளைப் பெற்று இருக்க வேண்டும். 2. Trinity College London பரீட்சையில் ஆங்கிலத்தில் பேசுவதற்கான பரீட்சையில் தரம் 10 அல்லது அதற்கு மேற்பட்ட தராதரத்தை பெற்றிருக்க வேண்டும். 3. கேம்பிரிட்ஜ் ஆங்கில பத்திரப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும். 4. Toefl பரீட்சையில் குறைந்தது 550 புள்ளிகளை பெற்று இருக்க வேண்டும்.

*நவஜோதி: ஒவ்வொரு வருடமும் இந்தப் பட்டப் படிப்பு மாணவர்களின் பாடத்திட்ட விபரங்களை விபரித்துக் கூற முடியுமா?*

சிவசக்தி: இந்தப் பாடத்திட்டம் ஒவ்வொரு Modules ஆக படிப்பிக்க படுகிறது. உதாரணமாக முக்கியபாடம், இரண்டாவது பாடம், துணைப்பாடம், வாத்தியப்ருந்தம் குழுவாக சேர்ந்து செயல்படுதல், ராக தாள விளக்கம், இந்திய சங்கீதத்தின் சரித்திரம், மனோதர்ம சங்கீதம், கல்பித சங்கீதத்தை தேர்ந்து எடுத்துப் பிரயோகிக்கும் முறை இப்படியான பல்வேறு வகையாகப் பிரிக்கப்பட்டு, கற்றுக் கொடுக்கப்படுகிறது. இது பற்றிய முழு விபரமும் பாரதீய வித்யா பவன் பட்டத்துறை படிப்பு நிலைய மூலமாக அறிந்துகொள்ளலாம்.

*நவஜோதி: இந்தப் பட்டப்படிப்பால் கிடைக்கக் கூடிய வேலை வாய்ப்புக்கள் என்ன?*

சிவசக்தி : பட்டப் படிப்பை முடித்தபின் இசைக் கலைஞர்கள் ஆகலாம். இசை ஆசிரியராக தனிப்பட்ட முறையில் கற்றுக் கொடுக்கலாம். Arts council, Local council, London Arts board, Theatre work, Youth Music composition, Film music Producer (தயாரிப்பாளர்) இந்திய இசைப் புத்தகங்கள் எழுதுவது, இசைப்பேழைகள் அதாவது இறுவெட்டுக்கள் Cassette வெளியிடுவது, நவீன இசைத் தயாரிப்புக்கள் (fution music), contemporary music தயாரிப்பது போன்ற பல்தரப்பட்ட இசைத்துறைகளை அவரவர் விருப்பம், தகமை தன்மையைப் பொறுத்து வேலையைத் தேர்ந்தெடுக்க முடியும்.

*நவஜோதி: இந்தப் பட்டப் படிப்புக்கான மாணாக்கர்களின் எண்ணிக்கை என்ன? இதனைக் கற்றுக் கொடுப்போர் யார்?*

சிவசக்தி: குறைந்தது 6 பேர் கூடியது 10 பேர் மட்டும். சிவசக்தி: பவன் போதானா ஆசிரியர்களே மாணவருக்கு முதுகெலும்பாக துணை செய்கிறார்கள். இந்தப் போதானா ஆசிரியர்கள் இங்கிலாந்தில் பிரசித்தியானவர்கள். இந்தியாஇ ஐரோப்பா ஏனைய நாடுகளில் அடிக்கடி இசைக் கச்சேரிகளைச் செய்பவர்கள். வட இந்திய சங்கீதத்தை முக்கிய படிப்பாகப் படிப்போருக்கு வட இந்திய இசைப் போதானா ஆசிரியர்களும், தென் இந்திய சங்கீதத்தை முக்கிய படிப்பாக படிப்போருக்கு தென் இந்திய போதனா ஆசிரியர்களும் கற்பிக்கின்றார்கள். இந்தியாவின் மிகப் பிரபல்யமான இசைக்கலைஞர்கள் லண்டன் வரும் சமயம் எமது பட்டப்படிப்பு மாணவர்களுக்கு பிரத்தியேகமான மிக முக்கிய இசை நுணுக்கங்களைக் கற்றுக் கொடுக்கிறார்கள். இது இந்திய பல்கலைக்கழகங்களுக்குக் கூட கிடைக்காத அரிய வாய்ப்பாகும். இந்த அரிய வாய்ப்பு இந்தப் பட்டப் படிப்பை படிப்போருக்கு அடிக்கடி கிடைக்கும். இது ஒரு பெரிய வரப்பிரசாதமாகும்.


*நவஜோதி: இந்த பட்டப் படிப்பிற்கு என்ன வயதுடையோர் விண்ணப்பிக்கலாம்?*

சிவசக்தி: குறைந்தது 18 வயது முதல் 50 வயது வரை படிக்கலாம்.

இசைத் தேர்வு மே மாதத்தில் நடைபெறுகிறது தாமதமான விண்ணப்பக்காரர் ஆகஸ்ட் மாதத்தில் இசைத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்.

*நவஜோதி: இவைகளைப் பற்றிய விபரங்களை எங்கு பெற்றுக்கொள்ளலாம்?*

சிவசக்தி: இவை பற்றிய மேலதிக விபரங்களை பாரதீய வித்யா பவனில் உள்ள பட்டப்படிப்பு அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.



படம்: Trinity College London

(அடுத்த இதழில் மற்றுமொருவருடன் சந்திக்கும் வரை விடைபெறுகிறேன்.)

HARTEX
ESTABLISHED 1969
THE GREAT OUT DOORS
COMBAT · PULLOVERS · MAP CASES · THERMAL UNDERWEAR
· RAINWEAR · BODY WARMERS · SHORTS · COMPRESSORS BAG
· CLOTHING · BOOTS · COOKWARE · MONEY BELTS
· HIKING BOOTS · HAMMOCKS · CUTLERY SETS · PLATES · WEBBING
· GLOVES · HEADWEAR · HIKING BOOTS
Competitive prices



55 VICTORIA ROAD
RUISLIP MANOR
MIDDX, HA4 9B
TEL: 01895 63424

321 NORTHOLT ROAD
SOUTH HARROW
MIDDX,HA2 8J
TEL: 020 8864 333

JK SHAH
Chartered Certified Accountants & Registered Auditors
572-574 Romford Road
Manor Park London E12 5AF
Tel: 020 8553 2436
Fax: 020 8514 6939
Accountancy
Taxation
VAT & Book-Keeping
Payroll
jk@jkshah.com - www.jkshah.com

Saratha JEWELLERS
MODERN DESIGNS - EXCLUSIVE COLLECTION
ANTIQUE STYLE - CRAFTED JEWELLERY
22ct gold specialist
saratha - A name well known for creativity & innovation
105 Ilford Lane, Ilford, Essex 1G1 2RJ
Tel: 020 8514 3072

020 8952 5677

Paul Bakers
Specialists in Egg & Eggless Cakes for all occasions
Also Bread, Baps, Rolls, etc.
CALL 020 8813 8322
SOUTHALL 020 8574 8388
32, SOUTH ROAD, / 143, NORWOOD ROAD
ALSO IN FELTHAM & ISLEWORTH

NW. Constructions Ltd
- Extension
- Conservatory
- Loft Conversion
- Plastering
- Kitchen
- Bathroom
- Heating
- Skimming
- All General Building Work Undertaken
- Free Estimate

Office: 020 8561 9284
Fax: 020 8573 1731
OVER 15 YEARS EXPERIENCE

JS
Specialists in:
All kinds of fittings
& suppliers of quality carpets, wood & vinyl flooring
J.S. Carpets
TEL: 020 8578 5959
508-510 Lady Margaret Road, Southall, Middlesex UB1 2NP jscarpets@msn.com

Morjarias Toys & Gifts
Summer Toys
Fans
Stationery
Soft Toys
Murtis
Tools – Hardware
Rizla – Duracell
Toiletries
Photo Frames
Party Goods
Household Items
Candles - Giftware
Panasonic Batteries
Pocket Money Toys
Helium Balloons
£ - Pound Lines - £
Trade Only
Morjarias House
North Circular Road
London NW10 7UD
☎ 0870 333 6898
www.toysgifts.biz

| Opening Times | | | | |
|---|---|---|---|---|
| Mon to Fri | 10am | - | 6pm |
| Late Night Thur | 10am | - | 8pm |
| Saturday | | Closed | |
| Sunday | 9am | - | 3pm |

J & J WINES LTD
WHOLESALERS OF WINES, BEERS, SPIRITS, TOBACCO GROCERIES, TOILETRIES AND MANY MORE!
GREAT VALUE FOR MONEY! EXCELLENT CUSTOMER SERVICE! EXCEPTIONAL QUALITY!
OPENING TIMES:
MON-FRI: 7AM-8PM SAT-7AM-5PM SUN-8AM-4PM
FIND US AT-
J & J WINES LTD, 10 BOEING WAY, INTERNATIONAL TRADING ESTATE, BRENT ROAD, SOUTHALL, MIDDLESEX, UB2 5LB TEL: 020 8867 9595 FAX: 020 8867 9795

BEJAY'S
ICE CREAM AND LOLLIPOPS
Discounted Ice Cream
Walls, Nestle, Treats, Cadbury, Mars and Many OtherBrands
Delivered 7 Days A Week
Resturant & Shop Etc
Wall's
61 - 65
GRANGEWOOD ST
EASTHAM
LONDON
E6 1HB
TEL: 020 8471 9405
FAX: 020 8472 3406
WHOLESALE SUPPLIER FOR LEADING ICE CREAM MANUFACTURERS



CARRARA
the choice for natural stone
- Manufacturers of kitchen worktops and bathroom finishes
- Largest selection of stone slabs & tiles
- Fitting 7 days from templating
- Trade & general public welcome

45-47 Standart Road, London NW10 6HF
Tel: 020 8838 4604 Fax: 020 8838 4603
www.carraramarble.co.uk



UK'S BEST SELLER



ALVA 650
WHITE FINISH
1875mm: £4,150
2500mm: £4,345
3750mm: £4,875
All prices subject to VAT & site survey

SPECIAL OFFER
* Installation up to 20 metres
* Condensate pump if required
* low noise condensing unit
FREE DELIVERY
Impressive Features
*Huge display capacity
*Low front bumper
*5 Row shelves plus base



ALVA 750-MAXI
WHITE FINISH
1875mm: £4,279
2500mm: £4,590
3750mm: £5,350
All prices subject to VAT & site survey

SPECIALISE IN REFRIGERATION & AMX35 SHELVING OFFERING UNBEATABLE PRICES FOR REMOTE & INTEGRAL DAIRY CABINETS
12 MONHTS PARTS AND LABOUR WARRANTY
(subject to terms&conditions)
0779 5456208